தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

" போற்றுபவர் போற்றட்டும்;
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்
வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"
—புரட்சிக்கவிஞர் (partly illegible: "—புழுதிவாரித்")

ஆண்டு சந்தா ரூ. 6—0—0

6 மாதச் சந்தா ரூ. 3—0—0

மலர் 1 | சென்னை | 30—4—55 | சனிக்கிழமை | இதழ் 44



தி. மு. க. பொதுச்செயலாளர்

புதுச்செயலாளர் – பொதுச்செயலாளர்

எட்டுத்தி சைக்குமிச் செய்தியைச் சொல்லிசும்
ஏற்றமு ரைத்திடடா!-எரு
இட்டுவ ளர்த்தப யிர்மணி தந்ததை
எங்கெங்கும் கூவிடடா!
நட்டமும் துன்பமும் நாடிவ ருமென்று
நன்கு தெரிந்திருந்தும்-தனைக்
கிட்டிவரும்பொறுப் பேற்றவன் நற்புகழ்
கொட்டிமு ழக்கிடடா!

போலிப் புகழ்கொண்டு தோலைக்க டித்துண்ணும்
புன்மதி யாளரைப்போல்-இள
மாலைப்பொழுதில்ம ணந்தக் துகாலையில்
மாளும்ம லர்களைப் போல்
வேலைக்கிடையில் அரசியலில் ஒளி
வீசிடும் வீணரல்ல!-தன்
வேலைஅரசியல் வீடுகழகமென்(று)
ஓதிடும் வீரமகன்!

எத்தனை சொல்லியும் ஏற்றத்தைப் பாடிட
இல்லை தமினிற்றிசொல்!-மணி
முத்தனையான்! தமிழ் மோகனன்! கற்பனை
மூண்ட கலைவடிவம்!
சத்தியமென்பது எத்தனை காசென்று
தாவிடும் வெம்பகையீர்!-உயர்
இத்தரைமீதினில் சத்தியநல்உரு
எங்கள் நெடுஞ் செழியன்!

பத்துக் குழந்தைகள் பெற்ற குடும்பத்தில்
பாகம் பிரிவதுண்டு-அறி(வு)
ஒத்தவர் சிற்சிலர் ஓரிடம் கூடிடில்
உள்ளம் பகைப்பதுண்டு!
எத்தனை லட்சம டாளங்கள் வீட்டினில்!
அத்தனை பிள்ளைகளும்-மனம்
ஒத்துநடக் தொருமாலையிட் டாரெனில்
ஓதுதற்கென்ன உண்டு!

கண்ணதாசன்

மதுரைச் செல்வம்

வைகை நதியின் மணல் பரப்பில் வஞ்சக நெஞ்சினரால் நடத்தப்பட்ட 'தீவிழா', எதிர்காலத்தில் வைரஉள்ளம் பாய்ந்த வாலிபப் பட்டாளத்தை மதுரையிலே அணிவகுத்துத் தரப்போகிறது என, கொள்ளிவைத்த அந்தக் கோழைகள் அறிந்திருந்தால், தீமூட்டி, பயங்காட்டி பாசறையை கலைத்திட எண்ணுமல், கிரேக்க மாவீரன் அலெக்சாண்டரை சதி செய்து கவிழ்த்த 'புருஷோத்தமன்'களாக, கூத்தரங்கிலே, கூட்டத்தின் நடுவே வீற்றிருந்த விடுதலை வீரன் ஆப்ரஹாமின் உயிரைக் குடித்த 'வெளிநாட்டுக் கோட்சே'க்களாக மாறியிருப்பார்கள். அவர்களின் 'அல்ப ஆசை' நிறைவேறியிருக்கலாம். ஆனுல் அப்போதும் வெற்றி நம் பக்கம்தான் சார்ந்திருக்கும்.

எதிரிகள் நம்மிடம் ஏமாந்த கதைகள் எத்தனையோ உண்டு. அத்தனைக்கும் மேலான சுவையைத் தரக்கூடிய கதை, மதுரைக் கதை—மாநாட்டுப் பந்தல் சாம்பலான கதை !

1946 !

மதயானைக் குணம் பெற்று மதுரை மண்ணேயே அலங்கோலப் படுத்திவிடக்கூடிய சக்தி நம்மிடமிருந்தும், சிங்காரப்பந்தல் சாம்பல் மேடாகி பிரேதக்களை வடித்துக் கொண்டிருந்த சோகக் காட்சியையும், 'தீ வைத்தோம், தேய்பாய்ந்தது உள்ளத்தில்' என்று வெற்றி முழக்கமிட்டுக் கொண்டிருந்த வீணர்களின் அட்டகாசத்தையும் கண்டு, மனம் நொந்து 'களபதி' யாகிவிடாமல் அன்றைய தளபதியாம் அறிஞர் அண்ணுவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அமைதி காத்து இன்று மதுரை திருநகரை, இலட்சிய வரலாற்றிலே மறக்கமுடியாத இயக்கக்கோட்டை யாக்கிய பெருமை நமது அருமை நண்பர்—செயலாற்றும் செம்மல்—பாண்டி மண்டலச் செல்வம்—அழகரடி எஸ். முத்து அவர்களைத்தான் சாரும்.

முத்து வெளியே உலவிக்கொண்டிருந்தபோது பந்தம் ஏந்தியவர்கள் பந்தலுக்குப் பக்கமே வரவில்லை. முத்து கைது செய்யப்பட்டார்; ஒடுக்கமான 'சர்க்கார் பெட்டிக்'குள் அந்த ஒளிமுத்துவை வைத்து மூடிவிட்டார்கள் அரசாங்கத்தார்.

வெளியே விட்டவுடன் மாநாட்டிற்கு வந்தார் முத்து. பந்தல் ...ந்து கிடந்தது. வந்திருந்த ...வர்களும் ஊரில் இல்லை. அந்த ...ாட்டில் ஏற்பட்ட நஷ்டம் ...000. இவரும் சீமான் அல்ல. ...ளும் சேளாக் காதர்கள் ஆகிவிட்டனர். அலைந்தார்---அவதிப் பட்டார். அறிஞர் அண்ணு ஒருவருடைய ஆதரவுதான் இருந்தது. இந்நிலையில் எப்படியோ தன்னைத்தானே சமாளித்துக் கொண்டதுதான் ஆச்சரியம் !

கட்சிக்காக நீ என்ன செய்தாய் ? இந்தக் கேள்வியை உருப்படியாக விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரிடம்தான் கேட்கமுடியும். அந்தச் சிலரில் பாதிப் பேர், பேசினேன்---கூட்டம் கூட்டினேன் கழகங்கள் அமைத்தேன்--என்றுதான் சொல்லுவார்கள் ; ஆனுல் முத்துவைப் போல, ''பேசினேன்---கூட்டங்கள் கூட்டினேன்---கழகங்கள் அமைத்தேன்---கிராமங்களைத் திருத்தினேன் --- பதினேரு வழக்குகள் கட்சியின் பெயரால் தொடரப்பட்டன---ஐந்தாறு தடவைகள் சிறை சென்றேன்---உடலில் ஒரு பாகம் கூட விடாமல் வெட்டுக் காயங்கள் பட்டேன்'' என்று சொல்பவர்கள் எந்த இயக்கத்திலும் பார்ப்பது அரிதுதான்.

இயக்கம் சிலருக்கு வேட்டைக் காடானது---சிலருக்கு வசந்த மாளிகையானது---ஒரு சிலருக்குத் தான் ஓயாத உழைப்பாக இருக்கிறது. அந்த ஒரு சிலரில் மதுரைத் தோழர், முத்துவும் ஒருவர்.

உழைப்பவனை உழைப்பவனுல் தான் காணமுடியும். தூத்துக்குடியில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில், மதுரையைச் சேர்ந்த சில உதிரிகளுக்கு இடம் கொடுத்தார் பெரியார்! தோழர் முத்துவுக்கு இது பிடிக்கவில்லை. தோழர் முத்து சந்தர்ப்பவாதிகளுக்கு இடங் கொடுத்த அந்த மனப்பான்மையை கண்டித்துப் பேசினுர். தலைவருக்கு ஆத்திரம் தாங்கவில்லை---கண்டபடி தூற்றிவிட்டார். அப்போது அங்கே மேடையில் இருந்த மறைந்த தளபதி அழகிரிசாமி தோழர் முத்துவை அழைத்து, அவருடைய கையெழுத்துப் புத்தகத்தில் ''உண்மை உழைப்புக்கு உண்டு பலன் என்றும்'' என்று எழுதி கையெழுத்துப் போட்டுத்தந்தார். இன்றும் அது இருக்கிறது தோழர் முத்துவிடம்.

★

1916-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ந் தேதி மானுமதுரைக்கடுத்த 'பெருஞ்சேரி' என்ற சிற்றூரில் பிறந்தார். அவருடைய தந்தையார் பெயர் திரு. சுப்பையா. இரண்டு வயது நடக்கும்போதே தந்தையார். இறந்துவிட்டார் அவருடைய மாமா திரு. கருப்பையாவின் ஆதரவில் வளர்ந்து வந்தார்.

பள்ளிக்கூடத்தில் குறும்புகளை பொழுது போக்காகக் கருதிய இவரை ஆசிரியர்களும், தடியடியில் தொடங்கி---கோதண்டம் போடுவது வரை செய்து, திருத்த எவ்வளவோ முயன்றனர்---முடியவில்லை ! பன்னிரண்டாவது வயதுவரை படித்தார். அதன்பிறகு, படித்ததெல்லாம் போதுமென்று புத்தகங்களை கட்டிவைத்து விட்டுப் பர்மாவுக்குப் போனுர்.

பதினுருவது வயதில் தாயகம் திரும்பிய முத்து இரண்டாண்டுகள் விவசாய வேலை செய்தார். 1937-ம் ஆண்டு ஹார்வி மில்லில் வேலைக் கமர்ந்தார். அப்போது தான் முத்துவுக்கு இயக்க உணர்ச்சி உண்டானது. ஆறுமுகம் என்ற தோழரால் கட்சியைப் பற்றி தெரிந்து கொண்டார். மதுரைத் தொழிலாளர் தலைவர் திரு. வரதராஜுலு நாயுடுவின் செயல்கள் இவருக்கு



ஆத்திரத்தை மூட்டின. இந்தி எதிர்ப்பு முழக்கத்துடன் வீதியில் தமுக்கடித்துச் சென்றவர்களை உதைத்து, தமுக்கையும் கிழித்தெறிந்துவிட்டனர் நாயுடுவின் ஆட்கள். உடனே நம் இயக்கத் தலைவர்கள் எல்லாம் ஆளுக்கொரு தமுக்கை கட்டிக்கொண்டு வீதிக்கு வீதி அடிக்கத் தொடங்கினுர்கள். தோழர் முத்துவும் அவர்களில் ஒருவரானுர்.

1941-ல் அழகரடியில் பெருங் கலகம்-அதனுல் முத்துவுக்கு வேலை போயிற்று. வேலையை இழந்ததும் முத்து ''டீ'' கடை வைத்தார். ஒரு நாள் நாயுடுவின் ஆட்கள் டீ குடிக்க வருவதுபோல வந்து, அங்கிருந்த வெந்நீரை எடுத்து முத்துவின்மேல் கொட்டினர். உடல் எல்லாம் கொப்பளித்துவிட்டது. ஒரு மாதகாலம் ஆஸ்பத்திரியில் இருந்தார்.

இந்தக் கலகங்களின் விளைவுதான் எலும்பொடிக்கப் பட்டது. தோழர் முத்து 1947-ல் பேராசிரியர் அன்பழகன் தலைமையில் **தோழியர் ரஞ்சிதம்** அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். இன்று அவருக்கு **மாலைமணி** என்ற பெண்மகவு இருக்கிறது.

முத்து எத்தனை தடவை சிறைக்குப் போனுர் என்பது உடனே சொல்லக்கூடிய காரியமல்ல. காஷ்மீரில் நேரு கைதான போது இவரும் மதுரையில் கைதானுர். இவரையும் கம்யூனிஸ்டுகளோடு சேர்த்துக் கைது செய்தார்கள். அப்போது நாட்டுக்கு விடுதலை வந்தது. கம்யூனிஸ்டுகள் உள்ளே விழாக் கொண்டாடினர். இவரும் மற்றும் பதினைந்து கழகத் தோழர்களும் துக்கநாள் கொண்டாடினுர்கள். கம்யூனிஸ்ட்டு தலைவர்களைமட்டும் விடுதலை செய்தார்கள்--இவரையும் தோழர்களையும் விடவில்லை.---

பவநகர் மகாராஜா மதுரை வந்தபோது கழகக் கொடிக்கும்---கருப்புக் கொடிக்கும் வித்தியாசம் தெரியாத போலீசார், கழகக்கொடியை இறக்கச் சொன்னுர்கள். மறுத்தார்---கைது செய்தார்கள். டில்லி மந்திரி மெகதாப் வந்தபோது ஒரு முறை சிறை-ரயில் நிறுத்தப்போராட்டத்தின்போது ஒருமுறை, நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டியபோது ஒரு முறை இன்னும் சிலதடவைகள் அவர் சிறை புகுந்திருக்கிருர். நித்திய வாழ்விலே இவர் சிறையைப்பற்றி மறந்திருக்க முடியாதபடி செய்துவிட்டது சர்க்கார்.

சண்டைப் படங்களில் கதாநாயகர்களை அதிபயங்கரமாக காட்டுவார்கள். ஆனுல் உண்மையாகவே, பயங்காமான நிலைமைக்காளான முத்துவைப் பார்க்கும்போது பரம சாதுவைப் போலவே தோன்றும். சிரித்துக்கொண்டு பேசுவார். பொதுக்கூட்டங்களிலே பேசும்போது மழலைக்குழந்தை தூங்குவதைப் போல கண்களை மூடிக்கொள்வார். அறிஞர் அண்ணு அவர்கள் இதை அடிக்கடி சுட்டிக் காட்டுவார்கள். நண்பர்களிடம் இணைந்து உறவாடுவார் முத்து. இயக்கத் தோழர்கள் என்ருல் உயிரைப்போல நேசிப்பார் ! முத்துவுக்கு, கட்சி, அவர் மூச்சு---பேச்சு --- நினைவு --- செயல் எல்லாம். முத்து, பாண்டி மண்டலத்தில் இலட்சிய ஒளி பரப்பும் முத்துதான்.

நம் இயக்கம் ஒரு சிலருக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களில் தோழர் முத்துவும் ஒருவர். அவர்

(11-ம் பக்கம் பார்க்க)

...ளுக்கு மதயானை ! இயக்கத்தினருக்கு மலர்க்கோத்து !

எண்ணம்

கண்ணதாசன்

தி. மு. கழகத்தின் பொதுக்குழுக் கூடி, புதிய பொதுச்செயலாளராக தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. நிரந்தரத்தலைவர் என்ற தலைப்பின் கீழே ஒரே உருவம், படம் பிடிக்கப்படுகின்ற தன்மையில்லாமல், மக்களாட்சிப் பண்போடு தி. மு. கழகம் இயங்கி "இரண்டாவது பொதுச்செயலாளராக நெடுஞ்செழியனைத் தேர்ந்தெடுத்துள்ளோம்!" என்று பறையறிவிக்கிறது. "அண்ணாதுரை, பதவியை விடமாட்டார்" என்று சில அவசரக்காரர்களும், "வேறு யாரையும் அவர் உண்டாக்கி வைக்கவில்லை" என்று சில அறியாதவர்களும் கொண்டிருந்த எண்ணத்தை அடியோடு தகர்த்து, மக்களாட்சிப்பண்பின் சகல அங்கங்களுக்கும் ஈடு கொடுக்க எம்மிடம் ஆட்கள் உள்ளனர் என்று முழக்குவதுதான் புதியபொதுச்செயலாளர் தேர்தலில் காட்டும் முடிவாகும்.

அதன்றியும், கழகத்தில் மக்களாட்சிப் பண்பு எவ்வளவு நல்ல நிலையில் இயங்குகிறது என்பதைப் படம் பிடிப்பதுபோல் கிளைக்கழகத் தேர்தல்களும் நடந்துள்ளன. ஆர்வமிக்க இளைஞர்கள் பலர் பொதுக்குழு, மாவட்டக்குழு உறுப்பினர்களாக வந்துள்ளனர். அவர்களுக்கு மனமுவந்து, பழம் பெரும் தொண்டர்கள் பலர் இடங்கொடுத்துள்ளனர்.

இந்த நிலையில், பொறுப்பிலிருந்து விலகுகிற அண்ணாவின் ஆலோசனைகளோடு, புதிய பொதுச்செயலாளர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இந்தப் பொறுப்பு சாதாரணமாக எல்லோரும் ஏற்று நடத்திவிடக் கூடியதல்ல. மிகச் சிலர் மட்டுமே ஏற்று நடத்தக் கூடிய பொறுப்பு. தொழில் அலுவலகத் தலைமையாளர் அதிகார தோரணையில் இயங்கினால் மட்டும் போதும்—ஆனால், இயக்கத் தலைமையாளர் அன்பும் அதிகாரமும் செலுத்தக்கூடியவராயிருக்கவேண்டும். பொறுமைவேண்டும். நிதானம் வேண்டும். சரியான முடிவுக்கு வரக்கூடியவராயிருக்க வேண்டும். இயக்கத்தில். அந்தத் தகுதியுள்ளோரில் ஒருவர் தோழர் நெடுஞ்செழியன்.

அத்தனை தோழர்களுக்கும் நெடுஞ்செழியன்மீது ஒரு அளவு கடந்த பற்றுதல் உண்டு. அவர் செயலாற்றும்முறை ஆங்கில பாணியில் இருக்கும். அதாவது, சொன்னால், சொன்ன நேரத்திற்கு வருவார். சொன்னதைச் செயல்படுத்துவார். வெறும் பேச்சு இருக்காது. நடக்கமுடியாததை நினைக்கமாட்டார்.

எந்தக் கட்சியிலும் முக்கியத்துவம் பெறுவது மட்டும் போதாது. இந்த முக்கியத்துவத்துக்கு இவர் தகுதியுள்ளவர்தானா என்று தட்டிப் பார்க்கும்போது எடைதாங்க வேண்டும். அப்படிப் பார்த்தால் நூற்றுக்குநூறு தகுதி உள்ளவர் நெடுஞ்செழியன். அவருக்கு இப்போதிருக்கிற பெரும் புகழ் நியாயமாக அவருக்குக் கிடைக்க வேண்டிய புகழில் கால்பங்குதான்; அத்தகுதி திறமை உடையவர்.

வெத்துவேட்டு விளம்பரங்களிலே பற்றில்லாத காரணத்தாலே தகுதிக்கு மீறிய மரியாதைகள் அவரைத் தேடி வரவில்லை. ஆனால், அவரது தகுதிக்கு என்ன மரியாதை தரலாம் என்று எண்ணிப்பார்த்தால், ஒன்றரைலட்சம் மக்களின் அன்பையும் தூக்கிக் கையில் கொடுப்பதன்றி, வேறு இல்லை! இப்போது நடந்துள்ளது. அதுதான்.

தகுதி தேடித்தந்த பதவி இது! வாழ்க நெடுஞ்செழியன்!

★

2-4-55 தென்றல் இதழில் நான் எழுதியிருந்த எண்ணத்திற்கு ஆதரவு தெரிவித்து பல ஊர்களிலிருந்து தோழர்கள் கடிதங்கள் எழுதியுள்ளனர். இது பற்றி, அதாவது நிதிபற்றி-அண்ணா அவர்களிடம் பேசியதில், அவர் அதைச் சிறிதுகூட விரும்பவில்லை என்பது தெரிந்தது. ஆகவே தோழர்கள், அந்த எண்ணத்தை எனது தனிப்பட்ட அன்புக் கருத்தாகக் கருதி, நிதி சேர்க்கும் எண்ணத்தை விட்டுவிடக் கோருகிறேன் ஆதரவுக் கடிதங்களை அனுப்பி வைத்த எல்லா தோழர்களுக்கும் என மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

★

உலகத்தை இயக்கிடும் சிலர்களின் வாழ்வில் இருளை அகற்றி, புத்தொளியைப் பாய்ச்சிய இன்ப நாள் வருகிறது. இதய பாரத்தை வெளிக்காட்டி, உரிமைக்குரலை நிலைநாட்ட வித்திட்ட பெருநாள் வருகிறது. நாளைய கதிரவன், வேதனைக் கடலில் தத்தளித்த அவர்களுக்கு திசைகாட்டி விளக்கு! நாளைய நிலவின் நீல ஒளி, உற்றதுணைவி, பெற்ற குழந்தைகளோடு இன்புன்றிருக்கப்போகும் அந்த உழைப்பின் உயிர்ச்சித்திரங்களுக்கு 'துறவுக்கோல'த்தை 'தூ' வென்று இகழச் செய்யும் 'மாயசக்தி பெற்றதாகத் தெரிந்தாலும் ஆச்சரியமில்லை. அத்துணை இன்பம்! அத்துணை இன்பம்! ஆனால் எத்தனை எத்தனை சோகக் கதைகள் அந்த இன்பச்சுனையில் அமிழ்ந்துகிடக்கின்றன என்பதை யார் எண்ணிப் பார்க்கிறார்கள்! மாலை வருவதாக மனையாளிடம் சொல்லிப்போய், ஆலை முதலாளிகளின் கோபாக்கினியில் பொசுங்கிப்போன கண்ணீர்க் காதைகள்! 'ஏன்' என்ற கணை தொடுத்து 'கூலி உயர்வு எங்கே' என்ற வினா எழுப்பி அதன் விளைவாய் 'ஓடிப்போ இங்கில்லை உனக்கு வேலை' என்று 'ஒய்யாரக்காரர்'களின் ஓம்காரக் கூச்சலுக்குப் பலியாகி அதனால் அவர்களின் வாழ்க்கைப் பாதையிலே பெரும் பிளவுகள் உண்டான துயரக்காட்சிகள்! இத்தனைக்கும் மேலே இன்பம் பெருக்கெடுத்து வருகிறதென்றால் அந்த மேநாள் எத்தகு சிறப்புப் பெற்றதாக இருக்கும் அவர்களுக்கு! உலகம் எங்களுடையது என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டவர்கள்-இறுமாப்போடு கூறிக்கொள்ளத் தகுதிபெற்றவர்கள் கொண்டாடுகின்ற விழா சாமான்யமானதாகுமா? அவர்களது இலட்சிய முழக்கம் வானை முட்டலாம் மேகமண்டலம்; ஒதுங்கிப் போகலாம்!

தி. மு. கழகம் - 'உங்களுக்காக நாங்களிருக்கிறோம்' என்று தொழிலாளர் வர்க்கத்தினரைப் பார்த்து வெறும் வாய் உபச்சாரத்திற்குச் சொல்லாத தி.மு.கழகம்-என்றுமே மே நாளை அலட்சியம் செய்வதில்லை; இன்னும் சொன்னால் ஆண்டுக்காண்டு அந்த நாளின் சிறப்பைக் கூட்டித்தான் வந்திருக்கிறது. இந்த ஆண்டு அதன் சிறப்பு மேலும் அதிகரிக்கிறது. பொதுச்செயலாளர் அறிக்கை விடுத்திருக்கிறார்; 'பேரூர் பொதுக்குழு'வும் நமக்கு வலியூட்டுகிறது. திராவிடத்தின் ஏழை, எளிய பாட்டாளித் தொழிலாளத் தோழர்களின் அமைப்பாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தக்கோரும் அந்தப் பெருவிழாவை அதன் அங்கமாக உள்ள நாம் அதைச் சிறப்பித்துத்தான் ஆகவேண்டும்! அது நம்கடமை! தலையாய கடமை!

சாடுகிறார்!

கருத்திதழ்கள் சமதளக்கண்ணாடிகள்; இல்லாததைப் பெருக்கிக் காட்டும் பூதக்கண்ணாடிகளல்ல"- அரசியலிலே கண்ணியமும், நாணயமும், ஒழுக்கமும் கொண்டோர் ஒருபோதும் இதை மறுக்கமாட்டார்கள். ஆனால் அவைகளிலே விதிவிலக்கு இருக்கலாம், ரசம் போன கண்ணாடிகளைப்போல!

சமீபத்தில் தென்னாட்டுப் பத்திரிகைத் தொழிலாளர் கழகத்தின் 17-வது மாநாட்டை தொடக்கிவைத்த ஆர்க்காடு ராமசாமியார் அவர்கள் நல்லதொரு சொற்பொழிவை நிகழ்த்தியிருக்கிறார்கள். பத்திரிகை தர்மத்தைக் குறித்து ஆர்க்காட்டார் அழகுபட விளக்கியிருக்கிறார். அதுபோது எழுத்துரிமையை அடக்கியாளும் ஆட்சியாளர்களையும், சக்தியை துர்விநியோகப்படுத்தும் எழுத்துக் கூலிகளையும் ராமசாமியார் சாடாமலில்லை. நீதிக்கட்சி ஒளி வீசிக்கொண்டிருந்த காலத்தில், குடைபிடித்தாண்ட பரங்கியரின் சாதாரண அடக்குமுறைகளையெல்லாம் பெரிதாக்கி எழுதிய பத்திரிகைகளை ஆர்க்காட்டார் இன்னும் மறக்கவில்லை என்பது நன்கு புலனாகிறது அவரது பேச்சிலிருந்து. சுதந்திரம் கிடைப்பதற்குமுன் 'வாய்ப்பூட்டுச் சட்டங்'களைக் குறித்து வன்மையாகவும் விதவிதமாகவும் கண்டித்து கிளர்ச்சி செய்துவந்த பத்திரிகையாளர்கள் இன்று அவற்றை ஆதரிக்கும்முதன்மையாளர்களாக பொதுவாழ்க்கையில் தோற்றமளிக்கிறார்கள்' என்று ராமசாமியார் வெளிப்படையாகச் சாடியிருக்கிறார்கள், பத்திரிகைத் தொழிலை வாணிப நோக்கோடு நடத்துவோரைக் கண்டித்து. இந்தக் கண்டனம் வரவேற்கக் கூடியதுதான். ஆர்க்காட்டார் அதோடு விடவில்லை. வாழ்வின் வளம் கருதி சொந்தக் கருத்தை விலைகூறிடும் வீணர்களைச் சாடியிருப்பதோடன்றி, நேர்மைக்கு புறம்பான வகையிலே எழுத்துரிமையைப் பறிக்கும் பாராளு மன்றத்தையும் சாடியிருக்கிறார். 'பாராளுமன்றம் எதை வேண்டுமானாலும் செய்யும் வலிமையுள்ள தனித் தலைமை நிலையம் என்று பேசப்படுகிறது. அதற்கு அத்தகு வலிமையில்லை' என்ற பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். இந்திய உபகண்டத்தின் அரசியல் சட்டம தனி மனிதனின் சுதந்தரத்தை பறித்திட அனுமதிக்கவில்லை என்பதையும் அவர் சொல்லியிருக்கிறார். டில்லி மூலவர்களுக்கு இந்தப் பேச்சு பேரிடியாகத் தானிருக்கும்; உரிமையைக் கிளப்புவது தென்னாடாகத் தானே இருக்கிறது என்றுகூட வேதனைப்படுவார்கள்!

வெண்பாப் போட்டி

(பூவைமே லெத்தனைப் பூ !)

தேர்ந்தெடுக்கப்பட்ட வெண்பாக்கள்

7-5-55 இதழில் வெளிவரும்.

தெலுங்கு மண்ணின் பொது உடைமைவாதிகள் – – – – தோல்வி கண்டு கலங்குவதேன் ?

பாவைக் கூத்து (3)

முன் கடிதங்கள்

நண்பா,

அரசியலில் புகுந்திடத் துடிக்கும் உனக்கு ஆளும் காங்கிரஸ் கட்சி பற்றியும், பொது உடைமைக்கட்சி பற்றியும் கடந்த இரண்டு வாரங்களாகக் கூறி வருகிறேன். சென்றவாரம் பொது உடைமையரின் 'ஐக்கிய தமிழகம்' பற்றி எழுதியிருந்தேன். இந்தக் கடிதத்தில் 'ஆந்திராவும் பொது உடைமையும்' என்பது பற்றி எழுதியிருக்கிறேன்; படி.

அன்பு நண்பா,

சென்ற கடிதத்தில், பொதுவுடமைக் கட்சியின் 'ஐக்கிய தமிழகம்' குறித்து சுருக்கமாக எழுதியிருக்தேன். அதிலிருந்து ஓரளவு உன்னால் புரிந்துகொண்டிருக்கமுடியும். ஆனாலும்கூட நீ அதைவெளிப்படையாக ஒப்புக்கொள்ளமாட்டாய்-ஒப்புக்கொள்ளவும் இயலாது. ஏனென்றால், காரண, காரியமில்லாமல் பொதுவுடமைக் கட்சியின்மீது பற்றுதலை வைத்துக்கொண்டு வீம்புக்காகவாவது அதுபற்றி நீ புகழ்பாடிக் கொண்டிருந்ததை கல்லூரியிலே பன்முறை பார்த்திருக்கிறேன். நண்பர் அன்புக்கரசுகூட பொதுவுடமைக் கட்சியின் மீது. நீ வைத்திருந்த விசித்திரக் காதலைப்பற்றி ஒருமுறை என்னிடம் எடுத்துக் கூறியிருக்கிறார். சில நேரங்களில் நான் சிரிப்பதுமுண்டு; சினம் பெற்று, 'ஏன் இந்த மோகம்?' என்று சிந்திப்பதுமுண்டு.

சென்ற பொதுத் தேர்தலிலே ஆந்திரத்தில் பொதுவுடமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் வெற்றி பெற்றபோது நீ அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை என்பதை நான் அறிவேன். "ஆந்திரதேசம் பொதுவுடமை பூமியாகிவிட்டது; தெலுங்கு மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்" என்றெல்லாம் கூட நீ பெருமையடித்துக்கொண்டாய், அதுவும் எனக்குத் தெரியும். பிரிய நண்பா, இந்தியஉபகண்டத்தின் தென்பகுதியைப் பொருத்த ...ரயில், எந்த இடத்தில் ... தேர்தலில் பொது ...ங்கட்சி வெற்றிபெற் ...லும், அந்த வெற்றி, ...ன்மை மிக்க மக்களால், ... தங்களது வாக்கு ...க்காமல் வீணாக் ...ற எண்ணத்தில் போட்டு அதனால்அடைந்த வெற்றியாகத்தான் இருக்கும்.

சென்ற தேர்தலிலே ஆந்திரத்தில் வெற்றிபெற்ற பொதுவுடமைக் கட்சியினர் இந்தத் தேர்தலில் - இடைத்தேர்தலில் ஏன் காங்கிரசை வெற்றி கொள்ளமுடியவில்லை? இதற்கு உன்னால் போதிய சமாதானம் கூறமுடியாது, என்பதை நான் நன்குணர்கிறேன். சென்ற தேர்தலிலே தோல்வியடைந்த கோபால் ரெட்டி, இந்தத் தேர்தலிலே அமோக வெற்றியடைந்து முக்கிய பதவியையும் பிடித்துக்கொண்டார். அவருக்கு இன்றைக்கு ஆந்திர மாநிலத்தில் நல்ல செல்வாக்கு! ஏன் இந்த நிலைமை? அன்று தழுவினார்களே பொதுவுடமையை - அந்தப் பொது மக்கள் தானே இன்று காங்கிரசைத் தழுவியிருக்கிறார்கள்! ஆந்திரா பொதுவுடமைக் கோட்டை என்று பொருளா? அன்று வெற்றிக்கொடி நாட்டிய பொதுவுடமைக் கட்சி இன்று ஏன் மண் கவ்வவேண்டும்? இன்று கவிழ்ந்திருக்கிற ஆந்திரப் பொதுவுடமைக்கட்சி அன்று எவ்வாறு வெற்றி பெற்றது? இவைபற்றி ஓய்வு நேரத்திலாவது சிந்தித்ததுண்டா? முதலில், வெற்றி போதையில் மூழ்கியிருந்திருப்பாய்! இப்போது கவலைக் கடலில் மூழ்கியிருக்கக்கூடும். வெளிப்படையாகவே சொல்லுகிறேன்; ஆந்திராவிலே நல்ல ஒரு அரசியல்கட்சியே கிடையாதெனலாம். பொதுமக்கள் விருப்பத்தொடு ஓட்டுப் போடுகிற கட்சி-அவர்கள் பின்பற்றக்கூடிய கட்சி ஆந்திராவிலே என்ன இருக்கிறது? ஆந்திராவை நினைத்த உடன் நெஞ்சத்திரைக்கு ஓடி வருவது குமரிவேடம் போடும் கிழட்டுக் காங்கிரசும், 'விட்டேனா பார்' என்று வெட்டி வீராப்புப்பேசும் பொதுவுடமைக் கட்சியும் தானே!

பொதுமக்களில், நூலறிவும், அனுபவஞானமும் இல்லாதவர்கள் ஒருபோதும் ஒரு கட்சியின் இலட்சியத்தை மதித்து ஒட்டு போடமாட்டார்கள். படித்தறிந்தவர்களோ, தரமும், கௌவரமும் பார்ப்பார்கள்; செல்வந்தர்கள்கட்சி தோற்றாலும் அவர்களை யொன்றும் பாதிக்கப்போவதில்லை:

இந்தக் கருத்தை வைத்துக் கொண்டே நடந்திருக்கிற ஆந்திரத் தேர்தலை ஆராய்ந்தால் முந்திய வெற்றியும், பிந்தியத் தோல்வியும் அதற்கான காரணங்களும் உனக்குப் புலப்படும்.

போன தேர்தலின்போது தென்னாட்டின் நிலை என்ன? குறிப்பாக ஆந்திரத்தின் நிலையாது?

ஆந்திராவைத் தனி மாநிலமாகப் பிரிக்க வேண்டுமென்ற போராட்டம் வலுப்பெற்று நின்றது; அதிலே பெயரளவிற்குப் பொதுவுடமைக்கட்சி தலையிட்டிருந்தது. இதை நீ மறுக்கமுடியாது.

வறுமையை முன்வைத்தே பொதுமேடையிலே 'சபாஷ்' பெறும் பொதுவுடமைக் கட்சிக்கு ராயலசீமா பஞ்சம் ஒரு பேராதரவாக இருந்தது.

தெலுங்கானா இளைஞர்களை காங்கிரஸ் சர்க்கார் வதைக்குள்ளாக்கியது.

இந்த மூன்று சாதகங்களும் பொதுவுடமைக்கட்சிக்குபோன தேர்தலின்போது கிடைத்திருந்தது. ஆந்திரப் பிரிவினையை மறுத்த, காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் பேசியது ஒரு சாதகம்; ராயலசீமா பஞ்சத்தை முன்வைத்து காங்கிரஸ் சர்க்காரை கண்டித்துப் பேசி மக்களின் ஆதரவைப் பெற முடிந்தது. மூன்றாவதாக தெலுங்கானா இளைஞர்கள் வதைபடும் சோகக்காட்சியை விளம்பரப்படுத்தி மக்களின் அனுதாபத்தைப் பெற முடிந்தது.

இந்த மூன்று சூழ்நிலைகளும் உருவாகாமல் போயிருந்தால் சென்ற தேர்தலிலே பொதுவுடமைக்கட்சி ஆந்திரத்திலே நிச்சயமாக வெற்றி பெற்றிருக்க முடியாது பொதுமக்கள் பெற்றிருந்த ஆத்திரத்தின் விளைவுதான் காங்கிரசை தோற்கடிக்க முடிந்தது, பொதுஉடமைக் கட்சித் தோழர்களால்! ஆனால் அந்த நிலை ஏன் இப்போது தலைகீழாக மாறிக்கொண்டது? பொதுவுடமைக் கட்சிக்கு ஓட்டளிக்க விரும்பிய இளைஞர்கள் இருந்தும் கூட இந்தத் தேர்தலிலே பொதுவுடமைக்கட்சி ஏன் தோல்வி காணவேண்டும்? முந்திய வெற்றியை நிலைநாட்டிக் கொள்ளக்கூடிய ஆக்கவேலைகளை, பொது உடமைக்கட்சி செய்துகாட்டவில்லை! செய்துகாட்ட முடியவில்லை. வெட்டுக் காயங்களுக்கெல்லாம் வெளிநாடு சென்று வைத்தியம் பார்க்கும் எண்ணத்திலே இருக்கிறார்களே தவிர, பிடித்த இடத்தில், அந்த இடத்துக்காரர்களின் அன்பைச் சம்பாதித்துக் கொள்ளமுடியவில்லை! அதே நேரத்தில் இன்னொன்றையும் நினைவுறுத்தி விடுகிறேன். காங்கிரஸ்காரர்கள் என்ன சாதித்துவிட்டார்கள் என்று நீ கேட்பாய். உண்மைதான்; அவர்கள் ஒன்றும் சாதிக்கவில்லைதான்! ஆனால் பொதுமக்கள் அதையா சிந்திக்கிறார்கள்! ஊமைக்கு ஓட்டுப் போடுவதைக் காட்டிலும் முடவனுக்கு ஓட்டுப் போடுவது உத்தமம் என்று கருதிவிட்டார்கள் அவர்கள். உருப்படியான - அங்கஹீனமில்லாத ஒரு கட்சியில்லாததால் நேர்மையான இயக்கம் இல்லாததால்தான் - மக்களின் இதயத்தைத் தொட்டு அவர்களின் நிரந்தரமான ஆதரவைப் பெற முடியாத இயக்கம் இல்லாத காரணத்தால்தான்; மக்கள் சக்தி சிதறிப்போய் செங்கோலும் சிங்காதனமும் ஒளி இழந்துபோகின்றன. இதை நீ

(10-ம் பக்கம் பார்க்க)

ஆயிரம் ... .. வேடதாரி

1920-ல் அமெரிக்காவில் மது விலக்குச்சட்டம் அமுலுக்கு வந்தது. அத்தோடு சட்டத்தை அமுல் நடத்தும் மதுவிலக்குக் காவலர்கள் பலர் தோன்றினர். அவர்களிலே இருவர் வேடிக்கையான பேர்வழிகள்; விநோதமான கோமாளிகள்; அதே சமயத்தில் சட்டத்தின் இரும்புப்பெட்டியிலே எவரையும் வீழ்த்தும் வல்லமை பெற்றவர்கள்; இஸி ஈன்ஸ்டின், மோ ஸ்மித் என்றழைக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள்.

"அந்தப் பயல்கள் வந்து இங்கே மூச்சுவிட விடமாட்டோம், தெரியுமா? அவர்கள் இங்கே நமது வாசற்படியிலே காலெடுத்து வைத்தாற் போதுமே. நமது ஆட்கள் அவர்களைக் கண்டுபிடித்து விடுவார்களே" என்று தனது கடையைப் பற்றி மிகப் பெருமையாக அள்ளி வீசிக் கொண்டிருந்தான் நியூயார்க் நகரத்தில் ஒரு கடைக்காரன். அவனுக்கு முன்னால் இரண்டு தடித்த 'பெரிய' மனிதர்கள், கடைக்கு வரும் வாடிக்கைக்காரர்களை வசப்படுத்த இரு மயக்கு விழி அணங்குகள்.

அந்த இரு தடித்த மனிதர்களை நியூயார்க் நகரத்திற்கு வந்திருக்கும் புது வாடிக்கைக்காரர்கள் என்று கருதி அவர்களுக்கு இரு விஸ்கி புட்டிகளை வழங்கி தங்கள் கடையின் அருமை பெருமை பற்றி எடுத்துக் கூறிக்கொண்டிருந்தனர் கடைக்காரனும் அணங்குகளும்.

"இதோ அவர்களுடைய படங்களைக்கூட இங்கே தொங்கவிட்டிருப்பது எதற்காக வென்றால் அவர்கள் தவறி இங்கே வந்து விட்டால் அடையாளங்கண்டு கொள்வதற்குத்தான்," என்றான். இதை ஆமோதித்த அங்கிருந்த ஒருத்தி தடித்த மனிதரில் ஒருவர் பக்கம் திரும்பி "உங்களுக்குக்கூட மீசை இல்லாவிட்டால், இதோ இருக்கும் அவனைப்போல்தான் இருப்பீர்கள்" என்று படங்களிலொன்றைக் காட்டினாள். "அவன்போல என்ன, அவனேதான்" என்று கூறி தன் பொய் மீசையை நீக்கிவிட்டு எழுந்தான். "உங்கள் யாவரையும் கைது செய்திருக்கிறோம்" என்று இருவரும் தெரிவித்தனர். இஸி ஈன்ஸ்டினையும் மோ ஸ்மித்தையும் கண்டு களிக்கவா செய்வர், மதுவிலக்கை விலக்க முயன்றவர்!

அவர்கள் பெயர்களைக் கேட்டாலே கள்ளக்கடத்தல்திமிங்கலம் முதல் சாதாரணக்குடிகாரன்வரை எல்லாருக்குமே நடுக்கம். அவர்கள் கொள்ளாத மாறுவேடமே கிடையாது. நூற்றுக்கணக்கான விதங்களில் யாருமே தெரிந்துகொள்ளா வண்ணம் இடத்திற்குத் தகுந்தாற்போலெல்லாம் வேடமிட்டுத் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

குள்ளமான தடித்த உருவமுடையான் மோ. இஸி அவனிலுங் குள்ளன். பத்திரிகைகள் 'ஆயிரம் வேதாரி' என்று அவனுக்கு நாமகரணமிட்டன. கார்னெல் என்னுமிடத்தில் அவன் மாணவன்போல் வேடமணிந்து சென்றான் ஒரு சமயம். பிரிதோர் சமயம் கோனி தீவில் ஈர நீச்சலுடை அணிந்தவனாய் வேகமாக ஒரு விடுதியினுள் நுழைந்து "பானம் வேண்டும்". என்று நடுங்கிக் கொண்டேபரிதாபமாகக் கேட்டான். அவன் யாரெனத் தெரியாத விடுதியின் உரிமையாளன் மது வழங்கினான். சட்டத்தை மீறியோன் தண்டனைக்காளானான்.

மற்றுமோர் முறை. இருவரும் நியூயார் நகரில் ஒரு கள்ளச்சாராயக் கடைக்குச் சென்றனர். "யார் அங்கே" என்று கேட்டுக்கொண்டே கடைக்காரன் கதவைத் திறந்தான். "நாங்கள் மதுவிலக்குக் காவலர்கள்" என்று சிரித்துக்கொண்டே தங்கள் உத்தியோகச் சின்னங்களைக் காட்டினர்.

"உண்மையான சின்னங்களைப் போலவே இருக்கின்றனவே" என்று கூறிக்கொண்டே இருவருக்கும் மது வகைகள் ஊற்றிக்கொடுத்தான், கடை முதலாளி. 'உண்மையானவைதான்' என்று தங்கள் உண்மை நிலையைத் தெளிவாக்கி அவனைக் கைது செய்தனர்.

இதுபோன்று அவர்கள் தங்களது ஐந்தாண்டு கால கூட்டுழைப்பின் போது சுமார் 5,000 நபர்களைக் கைது செய்தார்கள். அவர்களால் மூடநேர்ந்த கடைகள், அந்தக் கடைகளுக்கு ஏற்பட்ட நட்டம் எல்லாம் பல்லாயிரக்கணக்கான டாலர்கள் மதிப்பு இருக்கும். அவர்களால் பறிமுதல் செய்யப்பட்ட கள்ளச்சாராய மதுவகைகள்மட்டும் ஒரு கோடியே ஐம்பதுலட்சம் டாலர்கள் மதிப்பிருக்கும்.

மதுவிலக்கு அமுலிருந்த பதினான்கு ஆண்டுகளில் தங்கள் கடமையை நிறைவேற்றச் சென்ற 86 உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டனர். அநேகர் மருத்துவமனைகளில் கிடந்து அவதியுற்றனர். அந்தக் காரணத்தாலேயே இஸியும் மோவும் மிகுந்த ஜாக்கிரதையுடனேயே காலங்கடத்தினர்.

மதுவிலக்குச் சட்டப்படி மதுவிலக்குக் காவலன் ஒருவன் மது வகை கொடுக்கப் பெற்றவனாக இருக்கவேண்டும்; அதே சமயத்தில் வழக்குமன்றத்தின் கண் சாட்சியத்திற்காக அம் மது வகையில் சிறிது மாதிரியும் அவன் கொண்டுவர வேண்டும். அதற்காக இஸி ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்தான். தனது சட்டைக்கு உட்புறத்தில் ஒரு ரப்பர் குழாயை மறைத்து வைத்தான். அதில் குறிப்பிட்ட மதுபானத்தில் கொஞ்சம் நிரப்ப வசதி செய்யப்பட்டிருந்தது. மது வியாபாரத் தொழிலி லீடுபட்டிருந்தோருக்குத் தெரியா வண்ணம் இந்த முறையையே மற்ற காவலர்களும் கடைப்பிடித்தனர்: இம்முறையைத் திறமையாகக் கையாண்டதன்மூலம் இஸியும் மோவும் தொடர்ந்த வழக்குகளில் 100 க்கு 95 குற்றவாளிகள் தண்டனை பெற்றனர்.

1920-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் தேதி மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்தது. மதுவிலக்குச் சட்டத்தினால் சங்கடங்கள் வருமென்று எவரும் எதிர்பார்க்கவில்லை. "மதுவிலக்கை எவரும் மீறமாட்டார்கள்; அப்படி மீறினாலும் அதைக் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்க மதுவிலக்குக் காவலர்கள் உள்ளனர்" என்று மதுவிக்குக் கமிஷனர் ஜான் எப். கிரேமர் கூறினார்.

சில நாட்கள் கழித்து தபாலாபீஸ் குமாஸ்தா உத்தியோகத்திலிருந்து விலகி, மதுவிலக்கு இலாகாவிற்கு காவலர் வேலை தரவேண்டுமென்று இஸி மனுச் செய்துகொண்டான். அவனைப் போன்றோ தகுதியுடைய வரல்லர் என்று வேலை கூறப்பட்டது. 235 பவுண்ட் எடையும் 5 அடி 5 அங்குல உயரமும் உடையபருமனான சரீரத்தைக் கொண்ட உருவம் ரகசிய ஏஜண்ட் வேலைக்குத் தகுதி படைத்ததாகக் கருதப்படவில்லை. மேலதிகாரியிடம், 'அந்தத் தகுதியின்மைதான் சரியான தகுதியாகக் கொள்ளப்படவேண்டும்,' என்று இஸி கூறினான். பருமனான ஆளை நிச்சயம் எவரும் துப்பறிபவராகவே எண்ணிடார். எனவே, எவரிடமும் பழக வசதிகள் அதிகமாக ஏற்படும் சிறிய வயதில்கூட இஸி தனது தகப்பனார் சொற்படி பண்டிதர் வேலைக்குச் செல்லாமல் நியூயார்க் நகரத்தின் கீழ்க்கோடியில் தள்ளு வண்டி வியாபாரம் செய்துவந்தான். இஸி ஆறு மொழிகளில் நன்றாகப் பேசப் பழகியிருந்தான். எப்போதும் நகைச்சுவை மன்னனாகவே விளங்கினான். அனுபவ பூர்வமான வேடிக்கை விஷயங்களைக்கூறி நண்பர்களை எந்நேரமும் 'பல்லவராயர்களா'க்குவதில் அவனுக்கு அலாதி திருப்தி. சில சமயங்களில் அவனது வேடிக்கை விளையாட்டை வினையாக நினைத்து அவனது நண்பர்கள் வீண்சங்கடத்தில் வீழ்வர் துரதிருஷ்டவசமாக

> **டேவிட் ஏ. விஸ் என்பவரால் எழுதப்பட்டு அமெரிக்க மாத சஞ்சிகை யொன்றில் வெளியிடப்பட்ட கட்டுரையின் சுருக்கத்தை நண்பர் கஜேந்திரன் அவர்கள் தமிழில் அழகுபடத் தந்திருக்கிறார்; மதுவிலக்கு குறித்து சுவைமிக்க நிகழ்ச்சிகள் இதிலடங்கியிருக்கின்றன.**

மேலதிகாரி அவனுடைய விளக்கத்தை ஒப்புக்கொள்ள முதலில் மறுத்தார். உடனே தனக்கு மிகவும் வேண்டியவர்களென்று சில அரசியல் வாதிகளுடைய பெயர்களை வரிசையாகக்கூறத் தொடங்கவே, அவ்வதிகாரி இஸிக்கு உத்தியோகத்தைக் கொடுத்ததோடு நில்லாமல், இஸியின் நீண்டநாள் நண்பன் மோ ஸ்மித் என்பானையும் அதே உத்தியோகத்தில் நியமித்தார்.

இஸியையும் மோவையும் சர்க்கார் வேலைக்கு நியமித்தது குறித்து வருத்தப்படவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. வேலையை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்தே அவர்கள் தங்கள் திறமை மிக்கவர்களாகப் பிரகாசித்தார்கள்.

இஸி ஒருமுறை, "நாங்கள் இருவரும் தடித்த 'பெரிய' மனிதர்களாக இருப்பதால், ஒவ்வொருவரும் எங்களை எளிதில் நம்புகின்றனர்" என்று சொன்னான். பல சமயங்களில், காலையில் அவர்கள் அலுவலகத்திற்கு வரும்போது முப்பது குற்றப்பத்திரிகைகளுடன் வந்திருக்கிறார்கள். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் மிகவும் அதிகப்படியான கைதுகள் - எழுபத்தியொன்று - செய்திருக்கிறார்கள்.

பிற ஏஜண்டுகள் செய்யும் வேலை கொஞ்சமேயாயினும், நிறைய பணம் செலவழித்தார்கள். இந்த இரட்டையர் மட்டும் 75 செண்ட் விலையுள்ள பான வகையும் 25 செண்ட் விலையுள்ள பானவகையும் உள்ள இடத்தில் அவசியமேற்பட்டுக் குடிக்கவேண்டி வந்தால் 25 செண்ட் பான வகையையே தேர்ந்தெடுப்பர்.

அவர்கள் கல்லூரிக்குச் சென்றவர்களல்லர். இருந்தாலும் அவர்கள் அனுபவபூர்தியான மனோதத்துவத்தில் பட்டங்கள் பெறும் தகுதி பெற்றவர்களாக விளங்கினார்கள். ஒருமுறை சிகாகோவிலுள்ள ஒரு கடைக்குச் சென்று தன்னை இஸி இப்ஸ்டின் என்று அறிமுகம் செய்துகொண்டான்.

"நீ ஏதும் என்னைக் குறித்துக் கவலைப்படவேண்டாம். அந்தப் பெரிய மதுவிலக்குக் காவலன் இருக்கின்றானே இஸி இப்ஸ்டின், அவனுடை பெயரேதான் எனக்கும், மற்றபடி அவன் யாரோ, நான் யாரோ?"

"நீ ஈன்ஸ்டினைச் சொல்லுகின்றாயா?" என்றான் கடைக்காரன்.

"இல்லை, இல்லை; இஸி இப்ஸ்டின் இப்ஸ்டின்தான் அவன பெயர்," என்றான்.

"எனக்கே சொல்லுகிறாயே! என் மனைவியின் மைத்துனருக்குஅவனை நன்றாகத் தெரியும். ஏன், உன் வாடிக்கைக்காரர்களைத்தான் கேட்டுப் பாரேன். நான் சொல்வது தவறு என்றால் என் செலவில் உனக்கு மதுவகை வாங்கித் தருகிறேன்." என்று பந்தயங் கூறினான் இஸி. பந்தயம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வாடிக்கைகாரர்கள் இஸி சொல்வது தவறு என்று நிரூபித்தனர். கடைக்காரன் முகம் மலர்ந்தது. ஆனால், அந்த மலர்ந்த முகம் மதுவகைக்கான பணத்தையும், அத்துடன் குற்றப்பத்திரிகையும் இஸி நீட்டியவரை தானிருந்தது.

ஒரு சனிக்கிழமையன்றுபிற்பகல். ஒரு கடைமுன்பு பெரிய சத்தம். இரண்டு பருமனான மனிதர்கள் ஒரு பழைய காலத்துக்காரைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். ஒருவன் காரின் 'டயர்'களை உதைக்க மற்றவன் "அந்த விலை ஆளைக் கொன்றுவிடுமே" என்று ஆர்ப்பாட்டத்துடன் கூறிக்கொண்டிருந்தான். பத்துநிமிட நேரம் அவர்கள் கூச்சல் ஓயவில்லை. பின்னர் திடீரென்று இருவரும் கைகுலுக்கிக்கொண்டு கடைக்குள் நுழைந்தனர். அந்த கடைக்காரனிடம் பேனா ஒன்று இரவல் வாங்கிக்கொண்டு "இந்தக் காரை இவரிடமிருந்து இப்பொழுதுதான்விலைக்கு வாங்கிக்கொண்டேன். அவருக்கு ஒரு 'செக்' எழுதத்தான் பேனா" என்று அவர்களில் ஒருவன் விளக்கம் கொடுத்தான். "ஆமாம்," என்று மற்றவன் ஆமோதித்துக்கொண்டே" இந்த நல்ல சம்பவத்தை யொட்டி ஏதாவது அருந்தினால் என்ன" என்று கேட்டான். கடைக்காரன் சிறிதுகூடத் தயங்கவில்லை. உடனே இருவருக்கு மதுபானம் ஊற்றிக்கொடுத்தா[illegible] பல நாட்களாக ஏமாற்றிவந்த [illegible] கடைக்காரன் அப்பொழுதே [illegible] பட்டுக்கொண்டான்.

எஸ். கஜேந்திரன், பி.ஏ.

1924-ம் ஆண்டிலே [illegible] மிகவும் பிரபலமண[illegible] கள். வேறொரு அதி[illegible]

(8-ம் பக்[illegible]

ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி

அவனுடைய சிரிப்பு அவர்களுக்கு மேலும் கலக்கத்தையே உண்டு பண்ணியது. ''இனியாவது உண்மையைச் சொல்லிவிடுங்கள். பிறந்த நாட்டைக் காட்டிக் கொடுத்தால் என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?. தூக்குத் தண்டனை! பாவம்! ஆசைக்குரியவனை மணந்து வாழவேண்டிய நீ மரத்திலே தொங்க வேண்டியதுதானா? இன்பவல்லி, ஏன் பேசாமல் நிற்கிறாய்?'' என்றான் அந்த வீரன்.

இன்பவல்லியின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவள் எதுவும் பேசவில்லை. தலைகுனிந்து நின்று கொண்டிருந்தாள். அவன் மேலும் பேசினான். ''உங்களை அன்னை விடுதலை செய்யவில்லை. இராசராசன் இன்பவல்லியின் மீதுள்ள காதலால், உங்களைப் பவளத் தீவிலிருந்து கடத்தி வந்ததாகச் சொன்னான்!''

இப்படிச் சொல்லும்போது அந்த வீரனுடைய குரலிலே மாறுதல் தோன்றியது. இன்பவல்லிக்குத் திடீரெனச் சந்தேகம் ஏற்பட்டது. நிமிர்ந்து, அந்த வீரனைக் கூர்ந்து நோக்கினாள். அவனுடைய உதட்டிலே புன்னகை நெளிவதைக் கண்டாள். உடனே துணிவுடன் அவன் முகத்திலிருந்த மீசையை இழுத்தாள். அது அவளுடைய கையுடன் வந்து விட்டது. இதைச் சிறிதும் எதிர்பாராத அந்த வீரன் திகைத்தான். அதற்குள் அவனுடைய தலைப்பாகையையும் தட்டி விட்டாள் இன்பவல்லி.

உடனே அந்த வீரன் சிரித்து விட்டான். இன்பவல்லியும் சேர்ந்து சிரித்தாள். இரு பணிப்பெண்களும் ''இளவரசர்!'' என்று கத்தினர். ஆம்! இளவரசன் இராசராசன் தான் அங்கே நின்றான்.

''நீங்கள் பெரிய துணிச்சல்காரர்! சிறிது நேரத்திற்குள் எங்களை ஆட்டி வைத்துவிட்டீர்களே? உயிர் போய்த் தான் திரும்பிவந்தது!'' என்றாள் இன்பவல்லி!

''நீ தான் துணிச்சல்காரி! இவ்வளவு தூரம் உங்களைப் பயமுறுத்தியும் ஒரு வார்த்தையாவது உங்களிடமிருந்து பெறமுடியவில்லையே என்றால். அதுமட்டுமா! கடைசியில் என் வேஷத்தையும் வெளியாக்கிவிட்டாயே!'' என்றான் இளவரசன். இருவரும் படுக்கையில் அமர்ந்தனர்.

''முதலில், நீங்கள் உண்மையாகவே மணிமுடியின் ஒற்றர் என்றுதான் நினைத்தேன். நீங்கள் ...லையும் மாற்றிப் பேசினீர்கள். ...னால்தான் நான் பயந்தேன். ...ல் உங்களுடைய கை என் ...றியில் பட்டதும், எப்போதும் ... உங்களிடம் அனுபவித்த ...யைப் பெற்றேன். அப் ...க்குச் சந்தேகம் ஏற் ... அவசரத்தில் உங்க ...ல் மாறிவிட்டது. உண்மைக்குரலைக் கேட்டேன். பிறகு தான் இந்தத் துணிவு ஏற்பட்டது'' என்றாள் இன்பவல்லி சிரித்துக் கொண்டே.

''நாடகம் நல்ல வெற்றிதான்!'' என்றனர் மற்ற இரு பெண்களும். மணிமுடி அங்கு வந்ததையும், மறுநாள் வரச் சொல்லியிருப்பதையும் தெரிவித்தாள் இன்பவல்லி.

''தளபதி தளநாயகர் வந்தாரா?'' என்று கேட்டான் இளவரசன்.

''ஆமாம்! மீண்டும் நாளை வருவார்!'' என்றனர் பெண்கள்.

''எனக்கும் வேலை இருக்கிறது. அதிகாலையில் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, மீண்டும் அந்த மீசையை எடுத்து ஒட்டவைத்துக் கொண்டு, வந்த வேஷத்திலே திரும்பினான் இளவரசன். அவனுடைய மாற்றுருவத்தைப் பார்த்துச் சிறித்துக் கொண்டே நின்றாள் இன்பவல்லி!

மணிமுடியையும் இன்பவல்லியையும் பார்த்துச் சென்ற வீரன் தான் தளநாயகன். இன்பவல்லி வந்திருப்பதைப் பற்றி மணிமுடியிடம் தெரிவித்தபிறகு நகரைவிட்டு வெளியேறினான். எல்லையோரத்தில் ஒரு வீரன் தளநாயகனுக்காகக் காத்திருந்தான் ஒரு குதிரையுடன். தளநாயகன் அந்தக் குதிரைமீது ஏறிக்கொண்டு இளமரக்காவைத் தாண்டி ஆலங்காட்டுப் பகுதிக்குள் நுழைந்தான்.

ஓரிடத்தில் அன்னையின் படையினர் நாடோடிகளைப்போல குடிசைகளை அமைத்துக் கொண்டு தங்கி யிருந்தனர். தளநாயகன் அங்கே சென்றான். அவனுடைய குதிரை ஒரு புதருக்குப் பக்கத்தில் நிறுத்தப்பட்டது.

மங்கையும், நந்தினியும், மற்றும் பல வீரர்களும் ஒரு குடிசையில் தளநாயகனை எதிர்பார்த்து அமர்ந்திருந்தனர். தளநாயகன் அங்கு வந்தான். இடைதுறை நாட்டில் நிகழ்ந்ததை அவர்களிடம் விளக்கினான். ''மறுநாள் இரவு அன்னையின் படையினர் அனைவரும் மாற்றுடைகளில் இடைதுறை நகருக்குள் புகவேண்டும். நகருக்குள் போய்ச் சேரும் நாலைந்து சாலைகள் வழியாக ஐந்தாறு பேர்களாகப் பிரிந்து பிரிந்து செல்லவேண்டும். அனைவரும் இன்பவல்லியின் மாளிகைக்கு நள்ளிரவில் வந்து சேர வேண்டும்'' என்று அறிவித்தான் தளநாயகன்.

இந்த நேரத்தில் இரு வீரர்கள் ஒரு தூதுவனை விலங்கிட்டு அழைத்து வந்து அங்கே நிறுத்தினர். அத்தூதுவனிடம் ஒரு ஓலை இருந்தது. அந்த ஓலையில் இன்பவல்லியைப் பற்றிய விபரங்கள் எழுதப்பட்டு, மணிமுடியின் கையெழுத்து இடப்பட்டிருந்தது. மணிமுடி அத்தூதுவன் மூலம் இடைதுறையானுக்கு அனுப்பி யிருந்தான் அந்த ஓலையை!

வீரர்கள் அந்தத் தூதுவனை அப்பால் இழுத்துச் சென்றுவிட்டனர். உடனே தளநாயகன் சோழநாட்டின் வீரர்களில் ஒருவனை அழைத்தான். அவனிடம் ஓலையைக் கொடுத்து தஞ்சைக்கு அனுப்பிவைத்தான்.

சிறிது நேரத்தில் மீண்டும் இரு வீரர்கள் ஒரு தூதுவனை அழைத்து வந்தனர். அவன் சோழநாட்டிலிருந்து மணிமுடிக்கு இடைதுறையானின் கட்டளையை எடுத்துச் செல்லும் வீரன். அவனிடமிருந்து இடைதுறையானின் கட்டளையைப் பறித்துக் கொண்டான் தளநாயகன். அந்தத் தூதுவனும் வேறுபுறம் வீரர்களால் இழுத்துச் செல்லப்பட்டான்.

அன்னையின் படைவீரர்களில் ஒருவனை அழைத்து, இடைதுறையான் அனுப்பியதுபோல மணிமுடிக்கு அந்த ஓலையை அனுப்பி வைத்தான் தளநாயகன். பிறகு, எல்லோரையும் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளும்படியும், இதில் சிறிது தவறினாலும், எல்லோரும் அகப்பட்டுக்கொள்ள நேரிடுமென்றும் சொன்னான்.

தளநாயகன் மீண்டும் புறப்படத் தயாரானான். நந்தினி அவனுக்கு ஆகாரம் எடுத்துவந்தாள். அவன் முன்பு வைத்து விட்டு மௌனமாக நின்றாள். ''பிரயாணத்தால் களைப்பு அதிகமாகி விட்டது. பசியும் அதிகரித்து விட்டது.'' என்று சொல்லிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தான். மங்கையும், மற்ற பல பெண்களும், வீரர்களும் சூழ்ந்திருந்ததால் தளநாயகனும் நந்தினியும் ஒருவரையொருவர் பார்க்கக்கூட வெட்கினார்கள். பிறகு எப்படிப் பேச முடியும்? தளநாயகனை விட நந்தினிக்குத் தான் அவனிடம் பேச அதிக ஆவல். ஆனால் பேசமுடியவில்லை. அத்துடன் கடமையை நிறைவேற்றாமல் இருவரும் சந்திக்கவே கூடாது என்பது அன்னையின் கட்டளை. அதனால் இருவருமே இதய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டனர். அவர்களுடைய சிந்தனைகளை, வரப்போகும் போராட்டத்திலேயே செலுத்தினர்.

தளநாயகன் புறப்பட்டுப் போய்விட்டான். அன்னையின் படைவீரர்களும், சோழநாட்டு வீரர்களும் மாற்றுடைகளைத் தயார் செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரியின் தூதுவர்களைக் காவல்செய்ய, அங்கேயே சில வீரர்கள் நிறுத்தப்பட்டனர். ஆலங்காடு மீண்டும் அன்னையின் படைவீரர்களால் கலகலப்புடன் காணப்பட்டது.

9

பொறியில் சிக்கியது புலி

''வரைசில புலிக ளோடு வந்து கட்டுண்டவே போல்
அரைசருந் தாமும் கட்டுண்டு அகப்பட்ட களிரனேகம்!''
—கலிங்கத்துப் பரணி.

அன்னையிடம் தளநாயகன் அனுமதிகேட்டபோது, இன்பவல்லியை விடுதலை செய்ய அவள் மறுத்துவிட்டாள். ஆனால் இளவரசன் இராசராசன் இன்பவல்லியிடம் பைத்தியமாகி விட்டான். அவளை எப்படியாவது விடுதலை செய்து, தன்னுடன் அழைத்தேக வேண்டுமென்றே முடிவு செய்தான். தன் கருத்தைத் தளநாயகனுக்கும் அறிவித்தான்.

தளநாயகன் சிறிது நேரம் சிந்தித்த பிறகு ஒரு முடிவுக்கு வந்தான். இன்பவல்லி இராசராசனை உண்மையாகக் காதலித்தால், சோழநாட்டின் விடுதலைப்பணியில் அவளும் பங்கு ஏற்கவேண்டும் என்ற நிபந்தனையை விதித்தான். இளவரசன் அதை உற்சாகமாக ஏற்றான்.

இருவரும் தமிழ்நாட்டை அடைவதற்குப் பதில் பவளத்தீவுக்கே சென்றனர். இன்பவல்லியைக் கண்டனர். தளநாயகனின் நிபந்தனைக்குஇன்பவல்லி இணங்கினாள். இன்பவல்லியைக் கொண்டே இடைதுறையானை வளைக்க முடிவு செய்திருந்தான் தளநாயகன். அன்னைக்கு இன்பவல்லியின் விடுதலை பற்றியும், அதனால் ஏற்படும் அனுகூலம் பற்றியும் விவரித்துக் கடிதம் எழுதினான். அன்று மாலையே அன்னையின் அனுமதியும் கிடைத்து விட்டது.

இன்பவல்லியிடம் தன்னுடைய திட்டத்தை விளக்கினான். அதற்கு இன்பவல்லியின் மாளிகைதான் பொறியாக உபயோகப்படும் என்பதையும் எடுத்துக் காட்டினான். இடைதுறை நாடு சென்றதும் அவள் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றியும் எடுத்துச் சொன்னான். இளவரசனுக்காக இனபவல்லி எதுவும் செய்யச் சித்தமானாள். பிறகு எல்லோரும் தமிழகத்தை அடைந்தனர்.

ஆலங்காடு சேர்ந்ததும் இராசராசனை அனுப்பி, அன்னையின் படைகளுடன் தொடர்பு கொள்ளச் செய்தான் தளநாயகன். பிறகு

மாற்றுடை அணிந்து, இன்பவல்லியுடனும், மற்ற பெண்களுடனும் இடைதுறை நாட்டை அடைந்தான். அங்கே இன்பவல்லியையும், மற்ற பெண்களையும் அவர்களுடைய மாளிகையில் சேர்த்தான். அதன்பின்பு சோழநாட்டிலிருந்து வந்த ஒரு தூதுவனைக் கைது செய்து அன்னையின் படையிடம் சென்றான். அங்கே இளவரசனையும் மற்ற ஏனையோரையும் கண்டு தனது திட்டத்தை விளக்கினான். சோழநாட்டுத் தூதுவனைக் காவலில் வைத்துவிட்டு, மாறு வேடத்தில் மணிமுடியிடம் சென்றான். தன்னை சோழநாட்டுத் தூதுவனாக அறிமுகப் படுத்தினான். அதன்பிறகு தான் மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மறுநாட் காலையில் இராசராசன் மாற்றுடையில் இன்பவல்லியின் மாளிகைக்குள் நுழைந்தான். எதிர்பார்த்திருந்த இன்பவல்லி புன்சிரிப்புடன் அவனை வரவேற்றாள். இளவரசன் இன்பவல்லியின் மதிமுகத்தைக் கண்டு மயங்கினான். ''கண்ணே! இன்னும் எத்தனை நாட்கள் வேற்றானின் பூமியில் நாம் இருப்போமோ தெரியவில்லை. சோழநாடு திரும்ப ஆவலாயிருக்கிறது. ஆனால் அங்கேயும் பகைவனின் ஆட்சி நமக்கு விலங்கிட்டே வரவேற்கும்!'' என்றான் இளவரசன்.

''விலங்கிட்டு வரவேற்றாலும், உங்களுடன் இருப்பதைத் தான் விரும்புகிறேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் என்னை அழைத்துச் செல்லுங்கள். இந்த மாளிகைக்கும், பவளத்தீவு மாளிகைக்கும் எனக்கு வித்தியாசமே தெரியவில்லை. இரண்டும் எனக்குச் சிறைகளாகத் தான் தோன்றுகின்றன!'' என்றாள் இன்பவல்லி.

இருவரும் உட்கார்ந்து உரையாடிக் கோண்டிருந்தனர். அப்போது கதவு தட்டும் சப்தம் கீழே கேட்டது. உடனே இன்பவல்லி படுக்கையில் படுத்தாள். இளவரசன் ஓடி மறைந்தான் ஒருபுறம்.

அங்கே வந்தவன் தளநாயகன் தான். மாற்றுடையில் உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டதும் இன்பவல்லி எழுந்து நின்றாள். ''இளவரசர் இன்னும் வரவில்லையா?'' என்று கேட்டான் தளநாயகன்.

''உங்கள் வரவு கேட்டு ஓடி ஒளிந்துவிட்டார்!'' என்றாள் இன்பவல்லி சிரித்துக்கொண்டே. பணிப்பெண்களும், தளநாயகனும் சிரித்துவிட்டனர். முகத்தில் அசடு வழிய அங்கே வந்தான் இளவரசன்.

''இளவரசே, எல்லாம் தயார்! நான் ஒருபுறம் மறைந்திருக்கிறேன். நீங்களும் அப்படியே காத்திருங்கள். திட்டப்படி வேலையை முடித்துவிட வேண்டும்'' என்றான் தளநாயகன். இளவரசனும் தலையை ஆட்டினான். இருவரும் இரண்டு பக்கங்களில் சென்று மறைந்திருந்தனர்.

மணிமுடி இரவு முழுவதும் இன்பவல்லியைப் பற்றியே இன்பக் கனவுகள் கண்டான். பொழுது புலர்ந்ததும் தன் வேலைகளை விரைவில் முடித்துக் கொண்டான். இன்பவல்லியால் தனக்கோ, இடைதுறை நாட்டுக்கோ அபாயமில்லை என்றுணர்ந்தான். அதனால் முன் தினத்தைப் போல தன்னுடன் படைவீரர்களை அழைத்துச் செல்லவில்லை. தனியாகவே சென்று இன்பவல்லியின் மாளிகையை அடைந்தான்.

வழக்கம் போல பணிப்பெண்கள் இருவரும் ஓடிவந்து வணங்கி வரவேற்றனர். மணிமுடிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ''இன்பவல்லியின் உடல் நிலை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான் ஆவலாக. ''பூரண குணமாகி விட்டது. உங்களைத் தான் எதிர்பார்க்கிறாள்!'' என்றாள் ஒருத்தி. மணிமுடி குதூகலத்தால் பூரித்தவனாய் வேகமாகப் படிகளைத் தாண்டி, இன்பவல்லியின் அறைக்குள் நுழைந்தான்.

இன்பவல்லி படுக்கையிலிருந்து எழுந்து நின்றாள். ''வேண்டாம் படுத்திரு! வீணாக உடலை அலட்டிக் கொள்ளாதே!'' என்றான் மணிமுடி அருகில் வந்து.

''இப்போது குணமாகிவிட்டது!'' என்றாள் புன்னகையை வரவழைத்துக்கொண்டே. அவளுடைய புன்னகையில் மயங்கியவனாய் ''கண்ணே! இடைதுறை நாடு உன் வருகையால் பெருமிதம் அடைகிறது. உன் வரவுபற்றி இடைதுறை மன்னர் மகிழ்ச்சி தெரிவித்து நேற்று ஓலை அனுப்பியுள்ளார். உன்னைச் சிறைவைத்து, உன் பெற்றோரைப் பழிவாங்கிய அன்னையையும், அவள் படைகளையும் நாம் வெற்றிகொள்ள வேண்டும். ஆயிரந்தீவுகளையும் கைப்பற்றி, உனக்கு சாந்திமத்திவிலே முடிசூட்ட வேண்டும். இதுதான் இடைதுறை மன்னரின் உடனடியான கட்டளை!'' என்றான் மணிமுடி.

''அதுவும் என் பாக்கியமே! நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன குறை யிருக்கப்போகிறது. உங்களுக்கு வேண்டிய உதவி செய்ய நான் எப்போதும் சித்தமாயிருக்கிறேன். இப்படி உட்காருங்கள்!'' என்றாள் இன்பவல்லி. மணிமுடியின் உள்ளம் அவள் பேச்சில் மயங்கியது. அவளுக்குப் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்தான் மணிமுடி.

“நீங்கள் என் இங்கேயே நிற்கிறீர்கள்? கீழே போய் காத்திருங்கள்!” என்றாள் பணிப்பெண்களிடம். இரு பெண்களும் வெட்கமடைந்தவர்களைப் போல் நடித்துக்கொண்டே அங்கிருந்து வெளியேறினர்.

“அன்பே மற்றுமொரு நற்செய்தி!''

“என்ன!''

''இடைதுறை மன்னரின் அன்புக் கட்டளையொன்று!''

''சொல்லுங்கள். இந்த நேரத்தில் உங்களுக்காக எதுவும் செய்யக் காத்திருக்கிறேன்!''

''கண்ணே! ஆயிரந்தீவுகளை வெற்றிகொண்டு உனக்கு முடிசூட்டப் போகிறேனல்லவா! அப்போது இந்த இன்பவல்லி மணிமுடிக்குச் சொந்தமாகி விடுவாள்! என் ஆசையின் குழைவைப் பூசி மெழுகிய உன் கன்னங்களையும், புன்னகை உலராத உன் உதடுகளையும் சுவைக்கும் உரிமை இனி எனக்குத்தான். பூத்துக் குலுங்கும் உன் பருவ எழிலை இனி அள்ளி, அள்ளிப் பருகுவேன், இன்பவல்லி!'' என்று போதையில் ஆழ்ந்தவனைப் போல் இன்னும் நெருங்கி அவளைத் தொட்டான் மணிமுடி.

''என்ன அவசரம் உங்களுக்கு! ஆயிரந்தீவின் அழகுராணியாகத் தானே போகிறேன். பிறகு இன்பவல்லிதானே உங்களுடைய இன்பக் களஞ்சியம்!''

''ஆமாம்! மலர் மணம் தந்த மோகன மயக்கம்; தென்றல் தந்த இனிமை; உன் புன்னகை தந்த போதை; உன் மதிமுகம் தந்த இன்பம் இவையெல்லாம் என் உணர்ச்சியைத் தீயாக்கிவிட்டன கண்ணே! உன் கரங்களால் என்னைத் தழுவி, அணையாத அந்த ஆசைக்கனலை நீதான் அணைக்க வேண்டும்!'' என்றான் மணிமுடி. அப்போது அவன் தன்னை மறந்து பேசினான்.

''அந்த ஆசைக்கனலை நானே அணைக்கிறேன்!” என்ற ஆண்குரல் எழுந்தது மூலையில். திடுக்கிட்டான் மணிமுடி. திரும்பிப் பார்த்தான். தளநாயகன் அங்கே நின்றான் வாளுடன். அவனுடைய வாள் முனை மணிமுடியின் மார்பில் தொட்டு நின்றது.

''நீயா? சோழநாட்டின் தூதுவனல்லவா?''

''ஆமாம் மணிமுடியாரே! சோழநாட்டின் தூதுவன் தான். இடைதுறையானுக்கு ஓலை எடுத்துச் செல்லும் ஒற்றனல்ல நான். இராசேந்திரனின் உண்மைத் தூதன். உன்னை ஒழித்துக்கட்ட வந்திருக்கும் தளநாயகன் நான்!''

''என்ன? தளநாயகனா?”

''ஆமாம்!”

தளநாயகன் இடது கையால் தன் வேஷத்தைக் கலைத்தான். மணிமுடி தளநாயகனைக் கண்டு திகைத்தான். ''துரோகி! வஞ்சகி! சதிகாரி!'' என்று எரிந்து விழுந்தான் மணிமுடி. இன்பவல்லி 'கல, கல' வென்று சிரித்தாள். மற்றொருபுறத்திலிருந்து இளவரசனும் நகைத்துக்கொண்டே வந்தான். அவனைக் கண்டதும் மணிமுடி அயர்ந்து விட்டான்.

இராசராசன் ஓர் ஓலையை மணிமுடியிடம் நீட்டினான். ''ம்! இதிலே கையெழுத்துப் போடு!” என்று அதட்டினான் தளநாயகன். ''முடியாது!'' என்றான் மணிமுடி. உடனே இளவரசன் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். மணிமுடியின் வாயிலிருந்து குருதி வழிந்தோடியது.

''போடுகிறாயா, மாட்டாயா?''

அதட்டிக் கேட்டான் இள
மணிமுடி நடுங்கினான்.
ஒப்பம் வைத்தான் ம
அதை வாங்கிச் சுருட்டி
கொண்டான் இளவரச

மறு விநாடி?

இளவரசனும் - மாற்றுடையில் தளநாயகனும்

இந்தக்காட்சி அடுத்த இதழில்

ஆயிரம் வேடதாரி...

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

செய்யப்பட்டபொழுது அவன்ரப் பாராட்டுமுகத்தான் ஒரு செய்தித்தாள் 'அவர் ஒரு உண்மையான இஸி ஈன்ஸ்டின்' என்று குறிப்பிட்டது.

நியூயார்க் நகரத்தில் மட்டும் 100,000 மதுக்கடைகள் இருப்பதாக கணக்கெடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வோராண்டும் 60,000 குற்றவாளிகள் நீதிஸ்தலங்களின் முன் கொண்டுவரப்பட்டனர். இஸியும் மோவும் உள்ளபடியே ஓய்வு ஒழிச்சலின்றி தமது காரியத்தைத் திறம்பட நடத்தினர். கள்ள மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டோர் சிறைவாச தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஆயிரம் டாலர்களை அபராதமாகச் செலுத்திவிட்டு மீண்டும் மீண்டும் தங்களுடைய திருட்டுத் தொழிலில் முன்னைவிட உற்சாகத்துடன் இறங்கத் தயாராகவேயிருந்தனர்.

மதுவிலக்கு அமுலான முதல் ஆறு ஆண்டு காலத்தில் 49 காவலர்கள் கொல்லப்பட்டனர். கொலை செய்யப்பட்ட செய்திகள் அடிக்கடி வந்துகொண்டிருந்ததால் அவர்களிருவருக்கும் ஓரளவு துப்பாக்கிப் பயம் இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் தாங்கள் இருவரும் துப்பாக்கி முதலியவற்றைவைத்துக் கொண்டதாகக் கூறிக்கொள்ளவில்லை. இருவரும் தாங்கள் சுடப்படுவதினின்று, தாங்கள் சாமர்த்தியத்தினாலும் தங்கள் கம்பீரமான உருவத்தைக் கொண்டுமே தப்பித்துக்கொண்டனர். ஒருபொழுது கள்ளக்கடத்தற்காரன் ஒருவன் இஸியின் விலாவிலே துப்பாக்கியை வைத்து அழுத்திய சமயத்தில் "என்னைக் கொல்லுவதால் நீயோ, உன் குடும்பமோ ஒரு சிறிதுகூடப் பயன் பெறப்போவதில்லையே, மகனே" என்று கூறினான். அந்த நிமிடமே துப்பாக்கியை இறக்கிவிட்டு இஸியைப் பின்தொடர்ந்து கோர்ட்டுக்குச் சென்றான்.

பெரும்பாலான ஏஜண்டுகள் சில பல சமயங்களில் லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பெற்றார்கள். இஸி, மோ ஆகிய இருவர் மட்டும் விதிவிலக்காகவே விளங்கினர். ஒரு குறிப்பிட்ட உடன் ஊழியன் மாதமொன்றுக்கு 300,000 டாலர் லஞ்சம் வாங்கியதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்விருவர் மட்டும் ஆண்டு சம்பளமாக 3,600 டாலர் பெறுவதுடன் திருப்தியடைந்தனர்.

அவர்கள் வாழ்க்கையிலே ஏற்பட்ட ஒரேயொரு லஞ்சம் வழங்கப்பட்ட சம்பவம் மற்றவர்களுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது. பத்தாயிரம் டாலர் மதிப்புள்ள விஸ்கி பீப்பாய்களுடன் ஒருவன் கைது செய்யப்பட்டபொழுது குற்றப் பத்திரிகையை அவனிடம்கொடுத்துவிட்டுச் சென்ற இஸியைப் பின்தொடர்ந்து ஓடிவந்தானும். "நான் அவனைத் தப்பிவித்தால், எனக்கு அவன் மனைவியைத் தருவதாகச் சொன்னான். அவன மனைவி எனக்கு எதற்கு? எனக்குத்தான் ஏற்கனவே ஒருத்தி இருக்கிறாளே!" என்று பத்திரிகை நிருபர்களிடம் விளக்கமாகக் கூறினான் இஸி. இந்நிகழ்ச்சியை பிரமாதப்படுத்தி பத்திரிகைகள் பிரசுரம் செய்துவிட்டன. அதுவே அவர்களுக்குக் கேடு பயப்பதாயமைந்தது. சில மதுவிலக்கு அதிகாரிகள் இரட்டையருக்குக் கிடைத்த விளம்பரங்களினால் பொறாமைமிக்கோரானார்கள். பத்திரிகைகள் விளம்பரப்படுத்துமளவிற்கு நிர்த்தாட்சண்யமாய் அவர்கள் நடந்துகொண்டதால், அதிகாரிகள் அவர்கள் இருவரின் பெயர்களைக் கேட்டாலே எரிந்துவிழுந்தனர். ஒரு பெரிய அதிகாரி, இஸியைக் கூப்பிட்டு "நீ மதுவிலக்கு இலாகாவில் சாதாரண ஊழியன்; கீழ்த்தர உத்தியோகஸ்தன். மதுவிலக்கு சம்பந்தப்பட்ட எல்லாமே நீதான் என்று கருதவேண்டாம்." என்று அப்பட்டமாகக் கூறிவிட்டார். 1925-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் நாள் அவர்கள் உத்தியோகத்திற்கு உலைவைக்கப்பட்டது. 'உத்தியோகத்தின் நன்மை' க்காக என்று கூறி அவர்களுடன் 150 காவலர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

மதுவிலக்கை ஆதரித்தவர்கள் பலர் இதை எதிர்த்தனர். 'கள்ள மது விற்பனை ஒழிப்பு லீக்' என்ற சங்கத்தின் தலைவரான வேய்ன் பி. வீலர் அவர்கள் சார்பில் வாதிட்டார். ஆனால், எல்லா வகை பிரயாசையும் வீணாயிற்று. இஸியும் மோவும் பின்னர் இன்ஷூரன்ஸ் ஏஜண்டுகளாக மாறினர்.

1932-ல் இஸி தன் நினைவுகளை எழுதினான். அந்த நினைவு மலரை, தான் கைது செய்த 4.932 பேர்களுக்கு-அவர்கள் தன்மீது எவ்வித குரோதமும் கொண்டிருக்கமாட்டார்களென்று-சமர்ப்பணம் செய்திருந்தான். அதேபோல் அவனுக்குத் தெரிந்த சில கள்ளக்கடத்தல் திமிங்கிலங்களையும் சரிப்படுத்தி, தன்னிடம் அவர்கள் இன்ஷூரன்ஸ் செய்யும்படி செய்துவிட்டான்.

1938-ல் இஸி ஈன்ஸ்டின் மன்ஹாட்டன் ஆஸ்பத்திரியொன்றில் காலுக்குச் செய்த ரண சிகிச்சை கோளாறு காரணமாக இறந்துபட்டான். இஸியின் சவ ஊர்வலத்துடன் மோ ஸ்மித் கண்ணீர் உகுத்தியவாறே மயானம் வரை சென்றான்.

மதுவிலக்குக் காவலர்களாயிருந்த காலத்தில் இஸியும் மோவும் தங்கள் சாதனைகள்மூலம் அமெரிக்க மக்களை சிரிக்கவைத்தது போல் வேறெவரும் சிரிக்கவைக்க முடியவில்லை. என்று கூறப்படுகிறது.

மே விழா

திராவிட நாட்டின் ஏழை எளிய பாட்டாளித் தொழிலாளத் தோழர்களின் அமைப்பாக இருந்து பாடுபட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் ஆங்காங்கு 1-5-55-ஆம் நாளிலிருந்து 10-5-55-ஆம் நாள் வரையில், ஏதேனும் ஏற்ற ஒரு நாளில் உரிய சிறப்பான முறையில் கொண்டாடும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

[illegible] கழகத் தோழர்கள், துண்டு அறிக்கைகள் வழங்குதல், [illegible]வர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல் [illegible]பான்ற முறைகளில் விழாவை கொண்டாடுவார்களாக!

[illegible]ல்வேறு துறைத்தொழிலாளர்களை முன்னேற்றக் கழகக் [illegible]டியின்கீழ் ஒன்றுதிரட்டுவார்களாக!

[illegible]மே நாள் நோக்கம் திராவிடத்தின் திக்கெட்டும் [illegible]!

[illegible]சென்னை. | இரா. நெடுஞ்செழியன், பொதுச்செயலாளர் தி. மு. க.

ஏப்ரல் 24!

"கடந்த மாத முதல் தி. மு. கழகத்தின் ஆயிரத்திற்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் தேர்தலை நடத்தி, பின்னர், மாவட்டக் கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்று, இங்கே கூடியிருக்கிற புதிய பொதுக்குழு உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயக அமைப்பில் இயங்கி வரும் நமது கழகத் தேர்தல்களில் பல இடங்களில் போட்டி இருந்திருக்கிறது;

போட்டியிட்டு செயலாளர்களாகவும், இதரபொறுப்புகளைப் பெறுபவர்களாகவும் வருவது மிக நல்லதுதான்; ஆனால், போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள், அதனைப் பெரிதாக எண்ணாமல், தோல்வியுற்றவர்களுடன் கை கோர்த்துப் பணிபுரிய முன்வருவதுதான்—அவர்களைத் திறமைசாலிகள், ஜனநாயகப் பண்புடையவர்கள் என்றழைக்கப்படுவதற்கு உரியவர்களாவர்.

நமது கழகம் ஜனநாயக அமைப்புடன் கூடியது என்பதை மாற்றாரும் உணரும் வகையில், நாம், பொதுச்செயலாளருக்கும் இந்த ஆண்டு ஒரு மாற்றம் தர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

ஜனநாயக வளர்ச்சியில் தி. மு. கழகம் எத்தனை அக்கரை கொண்டது என்பதற்கு, புதிய பொதுச் செயலாளர் தேர்வு எடுத்துக்காட்டாக இருக்கும்.

இவர்கள் ஜனநாயகம் பேசுகிறார்களே, என்ன பலன்? தொடர்ந்து அண்ணாதுரைதானே, பொதுச் செயலாளர்?—சிலர் கூறுவர் அப்படி; நான் விலகிவிட்டு இன்னொருவர் பொதுச்செயலாளராக வந்தால், 'ஏன் அண்ணாதுரை விலகினார் தெரியுமா? அவர் எப்போதுமே பெரும் பெரும் பொறுப்பேற்க அஞ்சுபவர்; அதனால்தான் விலகினார்'—இவ்வாறு கூறுவர் இன்னும் சிலர்;

பொதுச்செயலாளர் வந்து சிறிது நாளான பின், 'அண்ணாதுரை விலகிக்கொண்டதினால் மட்டும் என்ன மாற்றம் ஏற்பட்டுவிட்டது? எல்லாம் அவர் சொற்படிதானே நடக்கிறது?' என்று, வேறு சிலர் கூறுவர்.

எனவேதான், நாம், மாற்றம் வேண்டும் என்பது, 'பிறர் கூறுவார்கள்,' என்பதற்காக அல்ல; நம்மில் எல்லோரும்பொறுப்புகளை உணர்ந்து நடந்துகொள்ளவும், ஜனநாயக வளர்ச்சியில் அக்கரை கொண்டவர்கள் என்பதாலும் பொதுச்செயலாளர் பதவியில் ஒருவரே தொடர்ந்திருப்பதற்குப் பதிலாக மாற்றம் இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம்.

எனவே, நீங்கள் எல்லாம் இம்முறை புதியதாக ஒரு பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுத்து, கழகத்தில் ஜனநாயக முரசு ஒலிப்பதை மாற்றாரும் கேட்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்;

புதிய பொதுச்செயலாளருடன் நாம் எல்லோரும் நன்கு ஒத்துழைத்து, கழகத்தின் இலட்சிய ஈடேற்றத்திற்குப் பாடுபட வேண்டும் என்று பெரிதும் விழைகிறேன்."

ஏப்ரல் 24 - பொதுக்குழுவில் அண்ணா

சிலம்பு வழங்கும் செல்வம்

(2)

பன்மொழிப்புலவர்
கா.அப்பாதுரை. M.A.L.T

தமிழில் அழிந்து பட்ட நூல்கள் பல. அவை இத்தனை என்றோ, இன்னின்னவை என்றோ, இத்தகையவை என்றோ எவராலும் கணித்துக் கூற இயலாது. ஆனால் பிறநூல் குறிப்புக்களால் அழிந்து பட்டவை என்று திட்டமாக அறியப் படும் நூல்கள் மட்டும் ஆயிரத்துக்கு மேல் உள்ளன என்று ஆசிரியர் மயிலை சீனி வெங்கடசாமி அவர்கள் கணித்துள்ளார்கள். 'செந்தமிழ்ச் செல்வி' மாதவெளியீட்டில் அவற்றின் பட்டியலை அவர் தொடர்ந்து தொகுத்து வெளிவிட்டு வருகின்றார்.

அழிந்துபட்ட நூல்களில் பெரும் பாலானவை கடல்கோளினாலோ, வேறு இயற்கை மாறுதல்களாலோ அழிந்தவை அல்ல. ஏனெனில் அவை படிப்படியாகவே அழிந்து வந்தன. 14ம் நூற்றாண்டு வரையும் அதற்கு இப்பாலும் இருந்து அதன் பின்னரே பல அழிவுற்றன என்று அறிகிறோம். பல, தொல்காப்பியர் காலத்திற்கு முன்னிருந்து அந்நாள்வரை தொகுதி தொகுதியாக அழிந்து கொண்டே வந்தன. பல இப்போதும் அழிந்து கொண்டே இருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை. இவ்வழிவுக்குக் காரணம் தமிழ் நாட்டின் அரசியல் மாறுபாடுகளும் பண்பாட்டு மாறுபாடுகளும், இவற்றிற்குக் காரணமான ஆரியரின் சமய, சமுதாய, அரசியல், பத்திரிகை ஆதிக்கமுமே யாகும் என்பது கூறாமலே அமையும். தமிழுக்குரிய தகுதியும் உரிமையும் மேம்பாடும் இன்னும் இந்நிலைகளால் மிகுதியும் பாதிக்கப் பட்டே வருகின்றன. கிளர்ந்து எழுந்து வரும் மக்கள் சக்தியும் மறுமலர்ச்சி ஆற்றலுமே இச்சூழலைத் திருத்தி அமைக்கவேண்டும்.

இழந்த செல்வங்கள்

நாம் இழந்த இலக்கியச் செல்வங்களின் பட்டியலில் எத்தனை சீரிய பண்பாட்டுக் கருவூலங்கள் இருக்கக்கூடுமென்பதையும்; தமிழ், தமிழர், தமிழின நாகரிக, வரலாற்றுப் புதையல்கள் எத்தனை இருந்திருக்கக் கூடும் என்பதையும் சிலப்பதிகாரம் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. ஏனெனில் அது அந்தப் பட்டியலிலிருந்து மயிரிழை அளவில் தப்பிப் பிழைத்த ஒரு கலைக் களஞ்சியமே ஆகும். உண்மையில் சங்க காலத்திலும் அதற்கு முற்பட்டும், பிற்பட்டும் பெயர் அறியப்பட்ட எத்தனையோ நூல்கள் அப்பட்டியலில் இடம் பெற்று விட்டன. பெயர் அறியப்படாதன இன்னும் எத்தனையோ? சங்க இலக்கியத்தில் முழு நூல்கள் மட்டுமன்றி, கிடைத்த நூல்களில் பல பகுதிகள் கூட அப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவை ஆகிவிட்டன.

சிலப்பதிகார வகையில் கூட அரும்பதவுரை ஆசிரியருக்கு முன் இருந்ததாக அவ்வுரையால் அறியப் படும் முதல் உரை நமக்குக் கிட்டவில்லை. தவிர அடியார்க்கு நல்லார் உரையில் 7வது காதை கானல் வரிக்கும் 20வது வழக்குரை காதை முதல் உள்ள பதினொரு காதைகளுக்கும் உரை அகப்படவில்லை. தமிழ்ப் பண்பாட்டிற்கு உதவும் ஈடும் எடுப்புமற்ற பொன்னுரையாகிய அடியார்க்கு நல்லார் உரையில் நமக்குக் கிட்டியுள்ளது சிலப்பதிகாரத்தின் 30 காதைகளில் 18 காதை யொழிய மீந்த 12 காதைகளுக்குமட்டுமே என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இழந்த செல்வங்களில் இருந்து சிலப்பதிகாரமும் அதன் உரைப் பகுதிகளும் மீட்கப்பட்டதற்குத் தமிழர் எவ்வளவோ மகிழ்வுற வேண்டும். ஏனென்றால் அதன் மூலம் நமக்குக் கிடைத்துள்ளது சிலப்பதிகார நூல் மட்டுமல்ல. இழந்த பேரிலக்கியத்தின் பரப்பு, உயர்வு, தகுதி ஆகியவற்றையும், அவற்றின் பண்பையும் ஆராய்ந்தறிய இந்த நூலின் வெளியீடே நமக்கு உறுதுணையாய் உதவியுள்ளது. தமிழில் வேறு எந்தத் தனி நூலைப் பார்க்கினும் இவ்வகையில் சிலப்பதிகாரமே தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றுக்கு ஒப்புயர்வற்ற மிகப்பெருங் கருவூலமாகும்.

தமிழ் ஆராய்ச்சிப் போக்கு

தமிழ் மொழி ஆராய்ச்சி, தமிழிலக்கிய ஆராய்ச்சி ஆகியவை தொடக்கத்தில் பெரிதும் தமிழ் நூலின் பரப்பையும் மொழிவளத்தையும் மட்டுமே கவனிப்பவையாக இருந்தன. ஏனெனில் அவ்வாராய்ச்சியின் தொடக்கக் காலத்திற்குள் நாகரிக உலகமொழிகளிடையேயும் கீழ்நாட்டு மொழிகளிடையேயும் தமிழ் வகித்து வந்த உயரிடத்தை அம்மொழி முற்றிலும் இழந்து விட்டிருந்தது. இந்தியாவின் நூற்றுக்கணக்கான பண்படா மொழிகளுள் ஒன்று என்ற அடிப்படையிலேயே ஆராய்ச்சியாளர் அதில் கருத்துச் செலுத்தினர். **இந்தியாவின் மொழிகளுள் ஆரிய மொழிகள் பண்பில்லாதவை, தென்னாட்டுத் திராவிட மொழிகள் மட்டுமே பண்பட்டவை** என்பது அன்று அறியப்படாமலிருந்தது—அறியப்பட்ட பின்பும் ஆரிய அரசியல், சமய, பத்திரிகை, சமுதாய ஆதிக்கங் காரணமாக இன்றும் பொதுமக்களுக்கு இது தெளிவாக உணர்த்தப்படவில்லை—அறிஞர் உலகுகூட இதை வாய்விட்டுப் பேசுவதில்லை—உரைக்க நினைப்பதில்லை, உயர்குலத்தாராக வாழும் ஆரியர் நலங்களை அது பாதிக்கும் என்ற காரணத்தினால்! இவ்வுண்மை அறிஞர் உள்ளத்திற்குள்ளேயே திரையிடப்பட்டது—திரையிடப்பட்டே வருகின்றது!

இந்தியாவில் திராவிட மொழிகளுக்கு உரிய தகுதி அடிப்படையான உயர்வு தரப்படாததுபோலவே, திராவிட மொழிகளிடையே தமிழுக்குரிய தனிப்பெருந் தொகுதியும் சிறப்பும் பொது மக்களிடையே இருட்டடிக்கப்பட்டது—அறிஞர் உள்ளங்களுக்குள்ளேயே திரையிடப்பட்டது—இன்றும் இருட்டடிக்கப்பட்டு, திரையிடப்பட்டே வருகிறது!

போதாக் குறைக்கு எல்லாத் தாய்மொழிகளின் மீதும்—திராவிட மொழிகள், ஆரிய மொழிகள் ஆகிய அனைத்தின் மீதும்—**சமஸ்கிருதம் என்ற வழக்கிறந்த மொழியின் நிழல், உலக அரங்கின் நோக்கு என்ற கதிரொலி அவற்றின் மீது படாமல் அன்று தடுத்தது—இன்றும் தடுத்தே வருகிறது!**

இந்த நிலைக்கு பெரிதும் உதவிய சூழ்நிலை வேறு ஒன்று உண்டு. அரை நூற்றாண்டுக்குமுன் திருக்குறளும், நாலடியாரும், தொல்காப்பியமும் நீங்கலாகப் புலவர் உலகில் அறியப்பட்ட ஏடுகள் கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகியவையும் அவற்றிற்குப் பிற்பட்ட ஏடுகளுமே. அறிஞர் கால்டுவெலும் போப்பும் தமிழுக்கு இந்தியமொழிகளிடையே தனிப்பெரும் உயர்வு தந்தவர்கள்தான். ஆனால் அவர்கள் அறிந்த தமிழ் சங்க இலக்கியமும் சிலப்பதிகாரமும் நீங்கலான பிற்காலத் தமிழே ஆகும். இவற்றை வைத்துக் கொண்டே அவர்கள் தமிழுக்கு அம்முதன்மை அளித்தனர். சங்க இலக்கியமும் சிலப்பதிகாரமும் வந்தபின் இந்த நிலை பெரிதும் மாறுபட்டுப் புரட்சிகரமாக வளர்ந்திருக்க வேண்டும். ஏனென்றால் சங்க இலக்கியங்கள் சமஸ்கிருத இலக்கியத்தைவிட மிகவும் பழைமையானவை. பல நூற்றாண்டுக் கணக்கில் பழைமையானவை. அத்துடன் சமஸ்கிருத இலக்கியத்தை விடப் பண்பில் உயர்ந்தவை. தவிர, சங்க இலக்கியம் காட்டும் தமிழ்த் திராவிட நாகரிகமும் சமஸ்கிருத இலக்கியம் காட்டும் இடைக்கால வட இந்திய நாகரிகத்தை விட ஆயிரம் மடங்கு உயர்வுடையது. இச்சிறப்புத் தகுதிகள் தமிழுக்கு உலகில் சமஸ்கிருத மொழி தாண்டி, கிரேக்க இலத்தீன மொழிகள் தாண்டி, உலகின் முதல் மொழி என்ற சிறப்பைத் தந்திருக்க வேண்டும். அது கிழை உலகில் தலைசிறந்த பழைய மொழி மட்டுமல்ல, அனைத்துலகின் தலைசிறந்த பழஞ்சிறப்புடைய செம்மொழி—அத்துடன் அனைத்துலகின் புதுச் சிறப்பும் குன்றாத புது மொழி என்ற ஒப்புயர்வற்ற நிலை அதற்கு இயல்பாகவே ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்நிலையை தமிழ் பெறவேண்டும் என்ற ஆர்வத்துடனே துடித்தது—மக்கள் மறவாத, ஆனால் அரசியலார் கண்களிலும் ஆட்சி ஆதிக்கவாதிகள் கண்களிலும் படாத—மறைமலையடிகளார் உள்ளம் அதே ஆர்வத்துடன் வா... ளாவிய புலைவாராய்ச்சிகளி... கடலடிதுழாவிய நுணுக்க ஆரா... களிலும் பயின்றது... பா. வே. மாணிக்க... மூளை. அந்நாளைய...

தென்றல்
திரை
வாசகர்களின் வசதிக்காக மாதமிரு முறையாக வெளிவருகிறது.
விலை 0—1—6
அடுத்த இதழ் 1-5-55 ல் எங்கும் கிடைக்கும்.
நிர்வாகி :
தென்றல் கன்சர்ன்ஸ்
2-127 மவுண்ட்ரோடு
சென்னை-6.

ருண்டின் தொடக்கத்திய) புலவர் உலகை பேரளவில் தட்டி எழுப்பிய துடிப்பு—தமிழகத்தில் ஏற்பட்ட முதல் மறுமலர்ச்சி — இதுவே. ஆனால் அந்நாளைய ஆட்சித் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசியல் ஆட்சிநிலங்களில் இழைந்த ஆளும் வகுப்பினர், தமிழ்நாட்டுச் செல்வப் 'பிரபுக்கள்' ஆகியோரின் பண்பும் உணர்ச்சியுமற்ற மர மண்டைகளையும் களிமண் இதயங்களையும் இது அசைக்கவில்லை.

இருவகைப் பண்பாட்டு எதிர்ப்புக்கள் : கம்பராமாயணம், பெரிய புராணம்.

சங்க இலக்கியம் தெரியப்பட்ட பின்பும், அதனால் திருக்குறளின் பெருமை துலங்கத் தொடங்கிய பின்பும், சிலப்பதிகாரம் நமக்குக் கிடைத்த பின்னும் பழைய சூழ்நிலையே நீடித்து இருந்து வருவது எதனால்? பல காரணங்களை முன்னிட்டு அந்தச் சூழ்நிலை மாறக் கூடாது, என்பதற்காகப் பலர் திரை மறைவில் இருந்து முயன்று வருவதினாலேயே ஆகும். **இன்று கம்பராமாயணத்துக்குப் பெருமை தருவதாகப் பறையடிப்பவர்களின் செயல்கள் உண்மையில் கம்பருக்குப் பெருமை தரும் நோக்கத்துடன் செய்யப்படும் செயல்கள் அல்ல. கம்பராமாயணத்துக்கு முற்பட்ட தனித்தமிழ் இலக்கியத்தின் பெருமை பொது மக்களின் கவனத்துக்கும், உலக அரங்கின் பார்வைக்கும் பரவி விடாமல் தடுக்கும் உள்ளெண்ணம் உடைய செயல்களே அவைகள்.** ஏனெனில் அந்நூல்கள் வெளிவருவதற்கு முன் தமிழின் தலைசிறந்த ஏடாகக் கம்பராமாயணம் புகழ் பெற்றது இயல்பே. இதை அடிப்படையாகக் கொண்டு, அதன் பின்னும் கம்பராமாயணமே தலைசிறந்தது என்று விளம்பரப்படுத்துவதில் அவர்கள் பரபரப்பு உடையவராகின்றனர். **"சங்க இலக்கியத்தின் பக்கம், திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியத்தின்பக்கம் நாடிவிடாதீர்கள்" என்று பொது மக்களிடம் கூறாமல் கூறும் செயலே இது.**

கம்பராமாயணப் போலி ஆர்வலரின் இத்தமிழ்ப் பகைமை நோக்கத்தை வலியுறுத்திக் காட்டும் இன்னொரு செய்தி உண்டு. தனித் தமிழ் ஆர்வமும் சங்க இலக்கிய ஆர்வமும் உடைய தமிழ் ஆர்வலர் கம்பராமாயணத்தைப் போலவே பெரியபுராணத்தையும் தமிழ்ப் பண்பாடு குன்றிய இடைக்கால நூலாகக் கருதுகின்றனர். இது தவறன்று. **கம்பராமாயணமும் பெரியபுராணமும் இருவேறு வகையில் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஊறு செய்பவையே ஆகும். ஆயினும் கம்பராமாயணத்தைப் போல பெரியபுராணம் சமஸ்கிருத மொழிக்கும் ஆரிய புராண இதிகாச ஸ்மிருதிகளுக்கும் ஆக்கம் தரவோ, தமிழுக்குச் சிறுமை அளிக்கவோ உதவமாட்டாது. கம்பராமாயண ஆர்வலர் இக்காரணத்தினாலேயே கம்பர்கால நூலாகிய பெரியபுராணத்தினையும் உள்ளத்தில் தீண்டாமல் விடுகின்றனர்** என்பது குறிக்கத்தக்கது.

இடுக்கித் தாக்குதல்

சங்க நூல்களில் தமிழுக்கும் ... பண்பாட்டிற்கும் உலக ... பெரும் புரட்சி செய்யத் ...ல் செய்யவில்லை. இது கம்பராமாயண ஆர்வலர் தமிழுக்குச் செய்த, செய்கிற கேடு. **சிலப்பதிகார வெளியீடும் சங்கநூல்களுக்குக் குறைந்த புரட்சித்தகுதி உடையதன்று. ஆனால் எந்தப் புரட்சியும் இன்னும் நிகழவில்லை.** இதற்குக் காரணம் வேறு. சங்க இலக்கியத்துக்காகப் பாடுபட்ட—பாடுபடும் அறிஞர் குழாம் அதிலேயே இன்னும் மிகுதி வெற்றி பெறவில்லை. சிலப்பதிகாரத்துக்கோ, தொல்காப்பியத்துக்கோ ஆர்வம் எழுப்பும் ஆற்றல் அவர்களிடையே ஏற்பட முடியவில்லை—சங்க இலக்கியப் போராட்ட முயற்சியிலேயே அவர்கள் களைப்புற்றுத் தளர்ந்து விட்டனர். ஆனால் இந்நிலையிலும் சங்க இலக்கியத்தில் காணப்படாத--சிலப்பதிகாரத்தின் சொல்லழகு, நாடகப்பண்பு, எளிமை நயம், கற்பனைத் திறன் ஆகியவற்றில் ஈடுபட்ட இளைஞர்---மாணவர்---இளம்புலவர் எழுந்துள்ளனர், எழுந்து வளர்ந்து வருகின்றனர். அதன் முழுப் பெருமையும் இன்று விளங்காவிட்டாலும் விரைவில் விளங்க வழியுண்டு. அதன் மூலமாகத் தளர்ந்துவிட்ட சங்க இலக்கிய இயக்கமும் உரம் பெற வழியுண்டு. இந்த நிலையைக் கூர்ந்து கவனித்து உணர்ந்து கொண்டவர்கள் கம்பராமாயண ஆர்வலர் குழுவில் உள்ள ஒரு சில தமிழ்ப் பகைவர்களே. ஆனால் நாட்டின் செல்வாக்கற்ற அந்தப் பகைவர்களால் சிலப்பதிகார எதிர்ப்பையோ, சங்க இலக்கிய எதிர்ப்பையோகூட நேரடியாகச் செய்ய முடியவில்லை--தமிழ் மறுமலர்ச்சி அலை பாயும் இந்நாளிலே அவர்கள் தம் எதிர்ப்பைக்கூட நெகிழவிட்டே வருகின்றனர். இந்நிலையில் தான் அவர்களுக்கு ஒரு எதிர்பாரா ஆதரவு கிடைக்குமென்ற நைப்பாசை கிளறப்பட்டு வருகிறது--சிலப்பதிகாரத்தை எதிர்க்கும் ஒரு கம்பராமாயண ஆர்வலருக்கு உதவியாக, கம்பராமாயண எதிர்ப்பு அரணிலேயே ஒருவர் அல்லது கம்பராமாயண எதிர்ப்பாளர் மேலாடையைத் தற்காலிகமாக இரவலாக வாங்கிப் போட்டுக்கொண்ட ஒருவர் முன்வரத் தொடங்கி உள்ளார்!

சிலப்பதிகார எதிர்ப்பை ஊக்கி அதன் மூலம் தளர்ந்துவிட்ட--முறிந்து வருகிற சங்க இலக்கிய எதிர்ப்பைப் புதுப்பித்து--ஆரியப் பாதுகாப்புக் கோட்டையை உறுதிப் படுத்தி அவ்வழியாக திராவிடத் தமிழ் மொழிகளின் வளர்ச்சியை--ஏன், அனைத்திந்தியத் தாய்மொழிகளின் வளர்ச்சியை--நாட்டு மக்கள் முற்போக்கை--நாட்டின் வருங்கால வாழ்வைத் தடைப்படுத்த இந்த இருமுனை இடுக்கித் தாக்குதல் பயன்படும் என்று ஆரிய நிழலில் அமர்ந்து ஆராய்ச்சி இழை நூற்கும் ஒரு சிலர் சரியாகவோ தப்பாகவோ கணக்குப் போடுகின்றனர்! இதைத் தெரிந்தோ, தெரியாமலோ--தங்கள் தனிநலம் கருதியோ, தனி ஆதிக்கம் கருதியோ ஆரிய எதிர்ப்பு அணியின் நிழலில் ஒதுங்கி, பகுத்தறிவியக்கத்தில் குளிர்காய வந்த ஒருவர் ஆதரிக்க முனைகின்றார்!

(... ...ம்)

முடிமன்னன் முடங்கல்...

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

மறுக்கமாட்டாய்! ஆந்திராவிலே அணைக்கட்டுத் திட்டமென்று பெயரளவிற்கு பத்திரிகையிலே பிரசுரிக்கச் செய்துவிட்டு காங்கிரஸ்கட்சி மக்களின் செல்வாக்கைப் பெறும்போது, அதை மறுத்துப்பேசி பொது மக்களின் கவனத்தைத்திருப்புவதற்கு பொதுவுடமைக் கட்சிக்குச் சக்தி போதவில்லை. அப்படிப் பேச முனைந்தால் வடநாடு, தென்னாடு பேதம் வந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள்! பொதுவுடமைக் கட்சியின் தலைமை பீடத்தின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ என்று அஞ்சுகிறார்கள்! ரஷ்ய நாட்டின்மூலம் கெட்டு விடுமோ என நடுங்குகிறார்கள்! ஏன் இந்தக் கோழைத்தனம்! அந்தக் காங்கிரஸ் வடநாட்டை வாழ வைக்கத் தயங்குகிறதா? ஆந்திராவிலே இப்போது நடைபெற்ற தேர்தலின்போது, வடநாட்டுக் காங்கிரசின் ஆதிக்கத்தை முன்வைத்து ஆந்திரம் உட்பட தென்னாடு இவ்வாறு ஒதுக்கப்படும் அநீதியை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்திருந்தால் நிச்சயமாக கோபால் ரெட்டியை ஜாமீன் தொகை இழக்கச் செய்திருக்கமுடியும். இன்னும் எத்தனை தலைமுறைகள் கழிந்தாலும் தென்னாட்டோடு வடநாட்டை இணைத்துப் பேசினால் பொதுவுடமையர் தென்னாட்டில் நிச்சயமாக வெற்றிகொள்ள முடியாது என்பதை நான் உறுதி கூறுகிறேன்.

நண்பா, ஆந்திரத் தேர்தல் குறித்துச் சொல்லிவிட்டேன். இனி அடுத்த கடிதத்தில், தமிழ்நாட்டில் பொதுவுடமைக் கட்சி, முக்கிய பிரச்சினைகளில் எவ்வாறு வேடமிட்டது என்பதை எழுதுகிறேன்,

—முடிமன்னன்.

◉

வெளிவந்துவிட்டது!

அருணோதயம் தரும் சிறுவர் வெளியீடுகள்!

சிப்பாய் முரளி

விலை அணா 4

சுவையான கதை

வியாபாரிகள் கழிவு 25-

முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

இரண்டாம் பக்கம் இரண்டாம் பத்தியில் 30 வது வரியில் காணப்படும் 'இருக்கிறது' என்பதை 'இருந்து வந்தது' என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 8

ஈற்றடி : "நாதத்தில் இல்லை நயம்!"

முடிவு தேதி 14-5-55

வெண்பாப் போட்டி

6 கார்கூந்த லேறிக் களித்திருந்த மல்லிகையே

ஆர்செய்த வஞ்சகத்தால் அல்லலுற்ருய் ?—

(இரட்டைப் புலவர் முறை)

வெண்பாப்போட்டி 6-க்கு வந்துள்ள வெண்பாக்களில் பரிசுபெற்ற வெண்பாவையும் ஏனைய தகுதியுடைய வெண்பாக்களையும் பேராசிரியர் மலரில் வெளியிட்டிருந்தோம். மீதமுள்ளவற்றைக் கீழே வெளியிட்டுள்ளோம்.

கார்கூந்த லேறிக் களித்திருந்த மல்லிகையே
ஆர்செய்த வஞ்சகத்தால் அல்லலுற்ருய் ?--சீர்மிகுந்த
வண்டமிழிற் சேர்ந்த வடமொழியாம் காகிதப்பூ
மண்டிய காரணமோ மற்று

—இரெ-தங்கையா, பி. ஏ; திருமங்கலம்.

★

--பார்மீதில்

காதல் மடலார்தம் காதலரின் கூடலிலோ
சாதல் அடைந்தாய்நீ சாற்று !

—கலவை கபிலன், வேலூர்.

★

--கார்வந்தும்

சோழ மறவன் துடியிடையாள் சேர்ந்துருக
வேழப்போர் செய்த விளைவு

—வித்வான் தா. சுப்பிரமணியம், திருக்கழுக்குன்றம்.

★

--சீர்பூத்த

தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போழ்து

—நா. பழனிவேலன், திருவெண்ணெய்நல்லூர்.

★

--சீர்கைம்பெண்

பெண்மையைக் கண்டுணராப் பேதைச் சமூகத்தால்
கண்ணீர் வடித்தநிலை கண்டு

—வெ. இறையழகன், ஆயக்குடி.

★

--சோர்ந்திடாதே !

பொன்றும் நிலைபோக்கிப் பொன்னுட்டில் நீவளரத்
தென்றல்நா னுண்டு தெளி

—திருமதி செல்வி, அம்பை.

★

--மார்புவிரி

வேற்கண்ணுர் வேதனையால் வெந்தழலில் வீழ்ந்தனையோ
மாற்றம் உரையாய் மலர்

—மு. மாணிக்கம், கருக்கன்காட்டுப்புதூர்.

★

--நார் பெருகி

வண்டோச்சி நின்ற மலிநீர்த் துறையோன் கைக்
கொண்ட வெப்பா லானதன்ருே ? கூறு !

—கே. வேலு, குளிக்கரை.

★

--சீர்குன்ற

வைத்து மறைந்தவரோ ? வைதிக நச்சம்பு
தைத்து நிறைந்தவரோ தான்

ச. இராமசாமி, திருநெல்லிக்காவல்-புதூர்

★

--பார்மீதில்

சோலைக் கிழைத்ததுயர் சோர்வோ டெனைவாட்ட
பாலை மனமாச்சுப் பார்

—தகடூரான் ஆசிரியன், கூத்தப்பாடி

★

--தார்சூடிச்

சிங்கத் தமிழரசன் சித்தம் களிசெய்வாய்
பங்கம்செய் பார்ப்பார் பழித்து !

—கா. சர்தார், அவிநாசி.

பேராசிரியர் விழாவில்.

புரட்சிக்கவிஞர் !

23-4-55 சனிக்கிழமை யன்று கோகலே மண்டபத்தில் பேராசிரியர் சுந்தரனுர் அவர்களின் நூற்ருண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அவ்விழாவிற்கு வந்திருந்த தலைவர்களையும், கவிஞர்களையும், பொதுமக்களையும் கண்ணதாசன் அவர்கள் வரவேற்று வரவேற்பு தந்து விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

புதுவைக் குயில்---கவிஞருக்குக் கவிஞர்---புரட்சிக்கவி பாரதிதாசனுரை தலைமை தாங்குமாறு கண்ணதாசன் அவர்கள் வேண்ட, புரட்சிக்கவிஞர் தலைமை பீடத்திற்கு வந்தார். மண்டபத்தில் மக்களின் பேரார்வம் கரைபுரண்டது.

பாரதிதாசனுர் முன்னுரையில் பேசாமல் முடிவுரையில் அதிகம் பேசுவதாகக் கூறினுர்.

அடுத்து புலவர் அறிவழகன் கவிஞர் வாணிதாசன், எத்திராசனுர், பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், மயிலை சிவமுத்து, அருண்மொழி, நடிகமணி டி. வி. நாராயணசாமி, கவிஞர் சுரதா, புலவர் நன்னன், ஆகியோர் மனேன்மணீயத்தின் சிறப்பையும், சுந்தரம் பிள்ளையின் துணிவையும் எடுத்துச் சொல்லி, தமிழுக்கு தமிழனுக்கு சிறப்புத் தரும் நூல்களில் ஒன்று அது என்று பாராட்டினுர்கள்.

கடைசியாக புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுர் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். அச் சொற்பொழிவின் சில பகுதிகள்

''மனேன்மணீயம் சுந்தரனுர் அவர்கள் 'திராவிடம்' என்ற சொல்லையும் பார்ப்பனீயத்தை எதிர்த்தும், திராவிட இயக்கம் சுயமரியாதை இயக்கம், ஜஸ்டிஸ் கட்சி இவைகள் தோன்ருக் காலத்தில் ஏன் காங்கிரஸே தோன்ருத காலத்தில் நமக்கு-நம் கொள்கைக்கு வித்திட்டவர் சுந்தரம் பிள்ளை என்று அப்பாதுரையார் குறிப்பிட்டது முற்றிலும் உண்மை.

கடவுள் வாழ்த்து என்று குறிப்பிட்டு தமிழ்த் தாய்க்கு வணக்கம் செய்கிருர். எல்லோரும் வணங்கித் தொழுத, விக்னேஷ்வரரை சுந்தரனுர் காரித் துப்பிவிட்டார்.

தமிழ்த்தாய் வணக்கத்தில் நாட்டின் எல்லைகளையும் திராவிடத்தின் இருப்பிடத்தையும் குறிப்பிடுகிருர்.

குறள் எல்லாக் குலத்திற்கும் ஒரே நீதி கூறுவது; ஆனுல்; ஆரியரின் மனுநீதி ஒவ்வொரு குலத்திற்கும் ஒவ்வொரு நீதி கூறுகிறது ஆதலால் இதை யாரும் விரும்பார் எனத் துணிந்து அப்போதே கூறியவர் சுந்தரனுர்.

ஆரியத்திலிருந்து தமிழ் வந்தது என்று கூறும் வையாபுரிப் பிள்ளை தமிழின் வைரி; இவர்களெல்லாம் தமிழைக் கெடுப்போர்.

தமிழ்த்தாயை யார் கெடுத்தாலும், குறைகூறினுலும் அவர்களை விடவேமாட்டேன்.

கூத்து என்ருல் என்ன ? அக்காலத்திலிருந்து தமிழன் கூத்தை நடத்தினுன். இக்காலங்களில் நடக்கும் கூத்தைப் பார்த்தாலே அக்காலத்தில் கூத்து எவ்வளவு சிறப்பிக்கப்பட்டது என்பது தெரியும். மனேன்மணீயம் எழுதி, நாடக நூல்களை சிறப்பித்த சுந்தரனுரின் நூற்ருண்டு விழாவை கொண்டாடுவது மிகச் சரி.

இவ்வாண்டு பீரங்கியில் நெருப்பு வைக்கப்பட்டிருக்கிறது. அது அடுத்தாண்டு வெடிக்கும். பலப்பலவாக வெடிக்கும். இன்னும் பல இடங்களில் சுந்தரனுர் விழா கொண்டாடி தமிழின் நாடக ஆசிரியரை வாழ்த்தவேண்டும்.'' எனக்கூறிதம் உரையை முடித்தார்.

கண்ணதாசன் அவர்கள் நன்றி கூறினுர்கள்.

மதுரைச் செல்வம்...

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஒருவருடைய பெருமுயற்சிதான் மதுரை நகரையே நம் பக்கம் இழுத்து வைத்திருக்கிறது. தோழர் முத்து நல்லவர், எளியவர்களுக்குத் தோழர்---துணைவர்---ஆதரவாளர் எல்லாம். தவிர்க்கமுடியாத துயர் வந்துற்ற போதிலும் பணத்துக்குப் பணியாதவர்.

சீமான் அல்ல! அன்ருட வாழ்வு நடத்த உழைக்க வேண்டியவர். அந்த நிலையில்கூட நம் இயக்கத்தை அதிபயங்கரமான இடத்திலே உருவாக்கியிருக்கிருர். எதிரிகளுக்கு ஓர் அணுகுண்டு--இயக்கத்தினருக்கு மலர்ச்செண்டு ! எதற்கும் தயார் என்று இயக்கத்திலே குதித்தார் முத்து. இன்று மதுரையில் எண்ணற்றவரை எதற்கும் தயாராக ஆக்கியுள்ளார். அழகரடியில், சிறு வாசகசாலை---அவருவடய பாசறை. அங்கே நெருங்கிவிட்டால் போதும் ! எப்பேர்ப்பட்டவரையும் அது தன்பால் இழுத்துவிடும் ! அத்துணை சிறப்பு அங்கே !

தொண்டர்--பேச்சாளர்--அமைப்பாளர் --- செயலாளர் --- இத்தனை வேலைகளும் செய்து வருபவர் தோழர் **முத்து.** நாம் தேடியெடுக்காமல் தானே கிடைத்தவர் அவர்.

முத்து ! அதை நாம் அணிந்திருக்கிரும். முத்து! இயக்கத்தின் மாண்புஅதற்கு ஒளிதந்திருக்கிறது.

இயக்கவாழ்வில் சுகம் தேடி ஏமாந்த இனம் கெட்டவர்களின் எதிர்ப்புக்கிடையே மாவட்ட மாநாட்டை அணிமையில் மதுரையிலே சிறப்புற நடத்தி, முத்து பெற்ற மகத்தான வெற்றி அந்த முத்துவுக்கு ஒளிக்கற்றைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்திருக்கிறது. ஏப்ரல் 10-ல் நடைபெற்ற மாவட்டச் செயலாளர் தேர்தலிலே முத்துவுக்குப் போட்டியில்லை. மகிழ்ச்சிதரக்கூடிய சேதி இது ! திருச்சியில் நடைபெறப் போகும் இரண்டாவது மாநில மாநாட்டுக்கு, ஏப்ரல் 21-ல் சென்னையில் கூடிய பொதுக்குழு தேர் தெடுத்த இரு செயலாளர்க ஒருவர் தோழர் முத்து, என போது இயக்கத் தொண்டினை வத்துடன் மேற்கொள்ளும் தே களின் உள்ளம் சிலிர்க் செய்கிறது. சிலிர்க்கட்டு சிலிர்ப்புக்கு இலக் இலட்சியவாதியை

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், எம்.ஏ.எல்.டி.

பதில் தருகிறார்

கே. எஸ். அன்புமணி,
கோணவாய்க்கால்பாளையம்

மூன்று ஔவையார்கள் இருந்தனர் என்று கூறுகிறார்கள். அவர்கள் எந்தக் காலத்தில் பிறந்தவர்கள்? சமகால-அரசர்கள் யார்? ஆத்திச்சூடி பாடிய ஔவை எந்தக் காலத்தைச் சார்ந்தவள்? புறநானூறு பாடிய ஔவை யார்?

ஔவையார்கள் மூன்றுக்கும் மேற்பட்டே இருந்திருக்கக்கூடும். குறைந்தபடி மூன்று பேரைக் குறிப்பிடமுடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். புலவர்களுக்கு நன்கு அறிமுகமான ஔவையார் சங்க காலத்து ஔவையாரே. அவர் கிழவி அல்ல. குமரி; அழகுடையவர்; பாடி ஆடும் விறலியர் குடியைச் சேர்ந்தவர். கல்வியாலும் உயர்ந்த பண்புகளாலும் அரசர் மதிக்கும் உயர்நிலையில் இருந்தவர். இவர் பகுத்தறிவுக் காலத்தவர், ஊன் உண்டே வாழ்ந்தவர். வைதிக ஔவையார் அல்ல. அவர் காலத்தில் பிள்ளையார் என்ற தெய்வம் தமிழகத்தில் கிடையாது.

இவருடைய சமகால அரசர் சேர சோழ பாண்டியர். காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டு.

அடுத்த ஔவையார் சோழப் பேரரசர் காலத்தில் அதாவது கி. பி. 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கம்பரும் புகழேந்தியும் வாழ்ந்த காலம் இது. முந்திய ஔவையாருக்கு இவர் ஆயிரம் ஆண்டு பிற்பட்டவர். இவர் எழுதியதாக திடமாகச் சொல்லக்கூடிய நூல் எதுவும் இல்லை. அசதிக் கோவை என்ற அழகிய காவியத்தின் பத்துப் பாடல்களே அவர் கைவரிசையை இன்று காட்டுகின்றன. இவரே ஆத்திசூடி கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகியவற்றை இயற்றியவரென்று பலர் கொள்கின்றனர். இது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

ஔவைக் குறள் என்ற நூலை எழுதிய ஔவையார் சித்தாந்த, வேதாந்தக் கருத்துக்கள் பரவிய பதினாறும் நூற்றாண்டை அடுத்து வாழ்ந்தவர் என்று கருதலாம்.

ஆத்திசூடி முதலிய நூல்களை எழுதிய ஔவையார் 12-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர், கம்பர் காலத்தவர் அல்ல என்று கருதுவதற்கு இடமுண்டு. அவருடைய ...ரச மனப்பான்மை, பிள்ளையார் ...ணக்கம், தேவார, திருவாசகக் ...ப்புகள், கல்வி ஆர்வம் ஆகியவை 17-ம் நூற்றாண்டுக்கு முற்றும் பொருந்துபவை. அவர் விட்ட இடத்திலிருந்து சிவப்பிரகாச அடிகள் நன்னெறியையும், குமரகுருபர அடிகள் நீதி நெறிவிளக்கத்தையும் பாடியதைக் காண, அவர்கள் இவரை அடுத்து சிறிது பிற்பட்டு வாழ்ந்தவர்கள் என்று கருதலாம்.

மேலும் பேரரசுகளும்அரசுகளும் அழிந்தபின் தமிழகத்தில் பல கலைக்கழகம் என்ற பெயர் மறக்கப் பட்டது. கல்லூரிகள் இல்லாமல் போயின. உயர்தரக் கல்விக்கு இடமில்லாமற் போயிற்று 'உயர்தரக் கல்விக்காக ஆங்காங்கே குருகுலங்களும் நாட்டின் கண்களாகிய சிறுவர் சிறுமியர்களுக்காகத் திண்ணைப் பள்ளிக்கூடங்களும் எழுந்த காலம் இதுவே. இக்காலத்தில் புதிய கல்வி முறையைத் தென்னாட்டில் அமைக்கப் பாடுபட்டவர் என்ற காரணத்தினாலேயே மலையாளக் கவிஞர் எழுத்தச்சன் அவ்வாறு பேர்பெற்றான். மலையாள நாட்டில் ஆசிரியர்கள் அவர் பெயரிலேயே குரு வணக்கம் இன்றும் கூறுகின்றனர். மலையாளத்துக்கு எழுத்தச்சன் புதிதாகக் கல்விமுறை வகுத்தது போலவே அதற்குச் சற்று முன் பின்னான காலத்தில் தமிழகத்தின் கடைசி ஔவையார்கல்விக்கென்று முதல் முதலில் புத்திலக்கியம் வகுத்திருக்கவேண்டும்.

இதுபோன்ற இலக்கியத்தை இன்னும் எம்மொழியிலும் காண முடியாது.

◎

ச. வீ. மு. நம்பி, சியாத்தீகுளம்

"தமிழினைப் போற்றுதும், தாய்த் தமிழ்ப் போற்றுதும் தாயைச்சேய் பேணல் தலையறம் என்று தொடங்கும் பாடலையும்" "தமிழினிய தெய்வதமே மொழிகள் குலத்தனி விளக்கே" என்று தொடங்கும் பாடலையும் பாடியவர்கள் (இயற்றியவர்) யாவர் என்று தெரிவிக்க முடியுமா?

இரண்டு பாடல்களையும் இயற்றியவர் டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள்.

◎

ஆ. கன்னிகேசுவரன்,
கிருஷ்ணப்பநாயக்கன் டேங்க்

5-3-55 தென்றல் 11-ம் பக்கத்தில் வெ. சு. சுக்ரு எழுதிய எழுத்தில் "வஞ்சிப்பத்தன் என்னும் பாத்திரம்" என்ற தொடர் ஒன்றைக் கண்டேன். கண்டது முதல் இன்று வரை சிலப்பதிகாரத்தே தேடினேன்; என் சிறு கண்களுக்குப் புலப்படவில்லை. அத்தொடர் சிலப்பதிகாரத்தே எங்கே இருக்கிறது என்பதைத் தாங்கள் தெரிவிக்கவும்.

சிலப்பதிகாரம் வஞ்சிப்பத்தனைப் பொன்வினைக் கொல்லன் பொய்வினைக் கொல்லன் என்ற பொதுத் தொடர்களாலேயே குறிக்கின்றன- வஞ்சிப்பத்தன் என்ற பெயர் நாடக மரபில் குறிப்பிட்டு வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட பெயராக இருக்கவேண்டும். தென்றல் அப்பாத்திரத்தைச் சுட்டியது அப்பெயராலேயே.

தமிழ்மாறன், குறும்பூர்.

குறும்பூர் என வழங்குவது சரியா?

குரும்பூர் எனப் பயில்வது பொருந்துவதா?

இவ்விரண்டில் இலக்கண முறைக்கு ஏற்றது எது?

காரணம் காட்டி விளக்குக.

குறும்பூர் என்பதுதான் சரி. அவ்வாறே நீங்களும் குறித்துள்ளீர்கள்.

இரா. கேசவன், சென்னை.

அல்குல்என்றால் என்ன? என் நண்பர், தொப்பூழிற்குக் கீழேயுள்ள, அகன்ற அடிவயிற்றைக் குறிக்கும் சொல் என்கிறார். நான் பெண்களின் மறைவிடம் என்கிறேன். எது சரி?

அல்குல் என்ற சொல் அரையின் பின்பகுதியையே நேரடியாகக் குறிக்கும். தெரிந்தும் தெரியாமலும் இடக்கரடக்கலாக அது மறைவிடத்தைக் குறிப்பதும் உண்டு. ஆனால் பெரும்பாலும் இப்பொருள் வாசிப்போர் மயக்கத்தினாலும் பிற்காலப்புலவர் வழக்கினாலும் பெருக்கம் அடைந்துள்ளது. தேர் பாம்பின் படம் ஆகிய உவமைகள் அரையின் பின்பக்கத்திற்கேபொருந்தும். பெண்களுக்குச் சிறப்பாக, ஆனால் இரு பாலருக்கும் பொதுவாக, இடை சிறுத்திருப்பதும், மார்பும், அரைபகுதியும் பெருத்திருப்பதும். அழகு என்று சிற்பக்கலை கருதி வந்துள்ளது.

மீனாட்சிநாதன், தேனி

இதோ இந்தப் பாட்டின் மூலம் தென்னவரை வடவன் சாடுகிறானா? புகழ்ந்து பாடுகிறானா? பொருள் கூறுக.

ஸ்நானமஸ்வட்- சஜம் மத்தம்,
விருட்சுபம், காமமோஹிதம்.
சூத்ரமக்ஷர சம்யுக்தம்,
தூரதபரிவர்ஜயேல்.

இந்த வடமொழி சுலோகத்தில் சூத்திரன் பழிக்கப்பட்டிருக்கிறான். அது மட்டுமல்ல. படித்த சூத்திரன் அதாவது திராவிடன் ஆபத்தானவன். மதயானை, கலசலான காளை, ஓடிவரும் குதிரை ஆகியவைகளை கண்டு ஆரியர் அஞ்சிடுவது வழக்கம். அதேபோல படித்த சூத்திரனைக் கண்டு விலக வேண்டும் என்று இந்தச் சுலோகம் கூறுகிறது. இது தென்னாட்டை நேரடியாக குறிக்கவில்லை, ஆனாலும் ஆரியர் நீங்கலான எல்லாத் தென்னாட்டவரையும் திராவிட இனத்தவரையும் ஆரியர் பகைவராகக் கருதி வெறுத்தனர் என்று காட்டுகிறது. அத்துடன் தென்னாட்டவர் கல்வி பெருமலிருக்க ஆரியர் எவ்வளவு அக்கரையுடன் சூழ்ச்சி செய்தனர் என்பதற்கும் இது சான்று.

மேதின விழா

சென்னை

1-5-55 ஞாயிறுமாலை 6 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெறும் மேவிழா கூட்டத்தில் பொதுச்செயலாளருக்கு சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பில் வரவேற்பு அளிக்கப்படும். அன்று பிற்பகல் **2** மணிக்கு திரு.வி.க. (கான்ரான்ஸ்மித் நகர்) திடலிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு மேடையை வந்தடையும், தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்வார், கிளைக்கழகங்கள் வட்டவாரியாக கழகக்கொடி ஏந்தி தவறாமல் ஊர்வலத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம், இயக்கத்தைச் சார்ந்த மன்றங்களும், படிப்பகங்களும், தொழிற்சங்கங்களும் இதையே கடைப்பிக்குமாறு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

இளம்பரிதி,
சென்னை மாவட்ட செயலாளர்.

திருச்சி

1—5—55 ஞாயிறு மாலை
6 மணிக்கு
திருச்சி டவுன் ஹாலில்
தலைவர்:
எம். எஸ். மணி
பேசுவோர்;
ஈ. வெ. கி. சம்பத்,
ஜி. மதிவாணன்,
ஐ. எம். ஷரீப்,
எஸ். ஜி. கிருஷ்ணன்

குறிப்பு.—1-5-55 ஞாயிறு காலை 9-மணிக்கு திருச்சி மலைக்கோட்டை தி. மு. கழகத்திலிருந்து தோழர் ஐ எம் ஷரீப் தலைமையில் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு திருச்சி நகரத்தில் உள்ள தி. மு. கழகங்களில் கொடியேற்றி வைக்கப்படும்.

அன்று மாலை 5-மணிக்கு திருச்சி சென்ட்ரல் டாக்கிஸிலிருந்து தலைவர் ஈ. வி. கே. சம்பத் அவர்களை திறந்த காரில் ஊர்வலமாக அழைத்து வரப்படும். அதுசமயம் இயக்க தோழர்களின் சிலம்ப விளையாட்டுகளும் நடைபெறும்.

ஊர்வலத்தில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

நகர தி. மு. க. திருச்சி.

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6.
Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14.